The Morning Star
CACM Central Office
"Asia House"
Maruthanarmadam
Chunnakam
Sri Lanka.

# உதய தாரகை
## The Morning Star


A Christian Publication Established 1841

Vol. 173 - Jaffna - September - Octobeer 2012 . No.6

*Righteousness Exalteth A Nation. But Sin is a Reproach to any people.*

Subscription Rs.20/=
(postage Include)
Please send your News & Articles
to
The Editor
The Morning Star,
"Asia House"
Maruthanarmadam, Chunnakam.
Email:
thecacmmorningstar@gmail.com

PUBLIC LIBRARY JAFFNA
28 NOV 2012





# அமெரிக்கன் மிஷன் தொண்டர்களது தலைமைப் பணிக்களம் தெல்லிப்பழை

யாழ்ப்பாணக் குடா நாட்டின் கிழக்குப் பக்கமாக அமைந்துள்ள கட்டுவன், ஏழாலை எனும் கிராமங் களுக்கும், மேற்குப் பக்கமாக அமைந்துள்ள அளவெட்டி, பன்னாலை எனும் ஊர்களுக்கும், வடக்குப் பக்கமாக அமைந்துள்ள மாவிட்டபுரம், வீமன்காமம், வறுத்தலைவிளான் எனும் பகுதிகளுக்கும், தெற்குப் பக்கமாக அமைந்துள்ள மல்லாகம், ஏழாலை எனும் பகுதிகளுக்கும் நடுவே நீண்ட பல வரலாற்று அம்சங்களைத் தன்னகத்தே கொண்டு அமைந்திருப் பது தான் தெல்லிப்பழை எனும் வரலாற்று புகழ் மிக்க கிராமம் ஆகும். இது யாழ்ப்பாணம் நகரிலிருந்து காங்கேசன்துறை(KKS) யில் அமைந்துள்ள இலங்கைத் திருநாட் டிற்கே அழகைக் கொடுக்கும் இயற் கைத் துறைமுகத்திற்கு செல்லும் பிரதான வீதியில், யாழ் நகரிலிருந்து 16Km தொலைவில் அமைந்துள்ளது. தெல்லிப்பழைக் கிராமத்தின் மத்தியில் காங்கேசன்துறை வீதிக்குக் குறுக்காகப் பலாலி விமானப்படைத் தலைமையகத்திலிருந்து விளான், இளவாலைப் பகுதிகளுக்குச் செல்லும் பிரதான வீதி குறுக்கறுத்துச் செல்வதனால் தோன்றுகின்ற சந்தி கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த மக்கள் மையமாக விளங்குகின்றது.

தெல்லிப்பழை இன்று உலகளாவியளவில் பிரபல்யமடையப் பல காரணங்கள் உண்டு. முதலாவது ஆங்கிலப் பாடசாலை யூனியன் கல்லூரி டானியல் பூவரினால் ஆரம்பிக்கப்பட்டது. முதல் வைத்தியசாலை தெல்லிப் பழையில் எட்வேர்ட் வோறன், ஜேம்ஸ் றிச்சேட்ஸ் அவர்களால் நடாத் தப்பட்டது. மிஷன் தொண்டர்க ளுடைய கல்லறை, தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோயில், தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி, தெல்லிப்பழை புற்று நோய் வைத் தியசாலை, தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை, இந்திய இராணுவத் துடனான யுத்தம் ஆரம்பமான இடம் இவ்வாறு பல கோணங்களில் தெல்லிப்பழை மகிமை பெறுகின்றது. குறிப்பாக இலங்கைத் தமிழர்கள் அரசியலில் நீண்ட காலம் செல்வாக்குச் செலுத்தியவரும், இலங்கைத் தமிழரசுக் கட்சியை நிறுவியவருமாகிய மதிப்புக்குரிய S.J.V.செல்வநாயகம் (தந்தை செல்வா) இவ்வூரைச் சேர்ந்தவர். அத்துடன் அவர் இவ்வூர் அடங்கியிருந்த காங்கேசன்துறைத் தேர்தல் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினராகவும் இருந்தார். இவ்வாறு உலகப் புகழையே பெற்ற தந்தை செல்வா தெல்லிப்பழைத் திருச்ச பையின் அங்கத்தவர் என்பது எல்லோருக்கும் பெருமை.

யாழ்ப்பாணத்தில் கிறிஸ்தவ சமயத்தின் வரலாறு, 1505ம் ஆண்டு, வியாபார நோக்கமாக இலங்கையில் காலடி வைத்த போதத்துக்கேயரு டைய வருகையுடன் ஆரம்பமாகின்றது. இவர்கள் முதலிலே இலங்கையின் கரையோரப் பகுதிகளைக் கைப்பற்றி கத்தோலிக்க சமயத்தைப் பரப்பத் தொடங்கினார்கள்.

*"The first Portuguese priest to set in the Island was Franciscan friar, Fr.Vicente, who as a Chaplin to Louren co de Almeida came to Ceylon in 1505. After 1505 the chaplains assigned to look after the Spiritual needs of the Portuguese residing in the Fort and the factory of Colombo and carried on missionary work among the Ceylonese. Penetrating into the interior even as far as Jaffna".*

இலங்கைத் தீவிலே முதன் முதல் காலடி எடுத்து வைத்த போர்த்துக்கேய குருவானவர், பரான்சிஸ்கன் சபையைச் சேர்ந்த அருட்தந்தை வின்சன்ட் ஆவார். இவர் லோறன்சோ டி அல்மெய்டா என்பவரின் கீழ் குருவாக இங்கு வந்தார். இவர் கொழும்புப் பிரதேசத்திலிருந்து யாழ்ப்பாணம் வரையான போர்த்துக் கேய போர் வீரர்களுடைய ஆன்மீகத் தேவையை நிறைவேற்றும் பொறுப்பை ஏற்றிருந்தார். போர்த்துக்கேயருடைய தலைநகர் லிஸ்பனிலிருந்தது. உத்தரவைப் பெற்றுக்கொண்டு இலங்கை வாழ் மக்களுக்கு நற்செய்தியை அறிவிக்கும் பொருட்டு 1543ம் ஆண்டு ஐந்து (5) பிரான்சிஸ்கன் குருமார் இலங்கைக்கு வந்து சேர்ந்தனர். இந்தியாவின் கோவா பிரதேசத்திலிருந்து மன்னாருக்கு வருகை தந்த பிரான்சிஸ் சேவியர் என்பவரினாலே அநேகம் பேர் கிறிஸ்தவத்தைத் தழுவிக் கொண் டார்கள். இதனால் யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்த சங்கிலி என்னும் அரசன்

(8ம் பக்கம் தொடரும்)

## விடுமுறை வேதாகமப் பள்ளி

வன்னிப்பிராந்திய திருச்சபைகளின் ஞாயிறு பாடசாலை மாணவர்களுக்கான ஐந்து நாள் விடுமுறை வேதாகமப் பள்ளி பூவரசங்குளம் புனித தோமா ஆலய வளாகத்தில் 65 பிள்ளைகளைக் கொண்டு வன்னிப்பிராந்திய நற்செய்திப்பணிக்குழு கூட்டுநர் அருட்திரு.ஜோன்.எஸ்.செல்வம் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் சிறப்பாக நடைபெற்றது.

பிராந்திய தலைவர் அருட்திரு.டீ. எஸ்.குகனேஸ்வரன் அவர்களின் தலைமையில் பிராந்திய குருமார் சகலரும் தங்கள் பங்களிப்புகளை வழங்கினார்கள். ஞாயிறு பாடசாலை பிள்ளைகளுக்கு மனன வசனம், பாடல்கள், நிறம் தீட்டுதல், ஆக்க வேலைப்பாடுகள் என்பன சிறப்பான முறையில் கற்றுக்கொடுக்கப்பட்டன.

இந்நிகழ்வின் சிறப்பம்சமாக வவுனியா மாவட்ட திருமறைக்கலாமன்ற இயக்குனரும் மாணவர்களும் இணைந்து பிள்ளைகளுக்கு நாடக பயிற்சிகளை நடத்தினார்கள்.

இந்நிகழ்ச்சி திட்டத்திற்கு கொழும்பு திருச்சபை அங்கத்தவர்களாகிய திருதிருமதி.வசந்தி இராஜரட்ணம் உதவி செய்தனர்.

## கோலாட்டப் போட்டியில் தேசிய மட்டத்துக்கு

யாழ்ப்பாண மாவட்ட முன்பள்ளிகளுக் கிடையிலான கோலாட்டப் போட்டியில் அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபையினரால் காரைநகர், ஊரியில் நடாத்தப்படும் அன்புச் சோலை முன்பள்ளி மாணவர்கள் இறுதிச் சுற்றில் யாழ் ஜோன் பொஸ்கோ முன்பள்ளி மாணவர்களுடன் நடைபெற்ற போட்டியில் வெற்றி பெற்று தேசிய மட்டத்துக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் கொழும்பில் நடைபெறவிருக்கும் தேசிய மட்ட போட்டிக்காக தொடர்ந்தும் பயிற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

இவர்கள் தொடர்ந்தும் வெற்றிகளை பெற்று மேலும் அன்புச்சோலை முன்பள்ளிக்கு பெருமை சேர்க்க திருச்சபை சமூகம், திட்டப் பணிப்பாளர், திட்ட இணைப்பாளர் ஆகியோர் வாழ்த்துக்களை தெரிவக்கின்றனர்.

இக்கிராமம் காரைநகர் பிரதேசத்திலே நீண்ட காலமாக யுத்தத்தினால் மிகவும் பின்தங்கியிருந்த போதும் தற்போது படிப்படியாக வளர்ச்சியடைந்து வருவது சிறப்புக்கு உரிய விடயமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாரகை ஒளி வீச்சு

அன்பின் உறவுகளே இந்நாட்களில் இல்லறத்தை அல்லது குடும்பங்களை குறித்து சிந்திக்க வேண்டும். எம் குடும்பங்களில் அன்பு, பாசம், நட்பு, பகிர்ந்து வாழுதல், மறைந்து போயும், பெற்றோரை பிள்ளைகள் மதிக்காமை பிள்ளைகளை பெற்றோர் மதிக்காமை இவற்றினால் கூட்டுக்குடும்பங்களெல்லாம் சின்னாபின்னமாகி சிதறடிக்கப்பட்டு, சீர்குலையும் அவல நிலைக்கு நாம் தள்ளப்படுகின்றோம். இதற்கு குடும்பங்களைக்குறித்த சரியான பார்வை அல்லது புரிந்தணர்வு இன்மையே ஆகும். இன்று மேலைத்தேயத்தைப் போல் குடும்பம் என்றால் எப்படியும் வாழலாம், எந்நக்கலாச்சாரத்தையும் பின்பற்றலாம் என எண்ணுகின்றோம். ஒரு குடும்பம் எப்படி இருக்க வேண்டும் என தலைவர் அருள்திரு ஈனோக்.பூ.புனிதராஜா ஏழாலை வடக்கில் நடைபெற்ற திருமண வழிபாடு ஒன்றில் ஆலோசனை தெரிவிக்கும் போது திருமறையில் உள்ள மூன்று ஊர்களின் பெயர்களை ஆதாரம் காட்டி குடும்பங்களும் அப்படி இருக்க வேண்டும் என்றார்.

1. பெத்தேல்- கடவுளின் வீடு
   ஒரு வீடு எப்போதும் இறைவன் வாழும் இடமாக இருக்க வேண்டும். இல்லத்தின் தலைவர் இயேசு என்பது மட்டுமல்ல இல்லமும் அங்கு வாழ்பவர்களும் கடவுளின் மக்களாக வாழ வேண்டும். எம் வீடு. இறை வீடாக இருக்கிறதா? சிந்திப்போம்
2. பெத்லகேம்- அப்பத்தின் வீடு
   எம் வீடு எப்பொழுதும் பகிர்ந்து வாழும் இடமாக, மற்றவர்களையும் போசிக்கும் இடமாக இருக்கிறதா?
3. பெத்சாயிதா- இரக்கத்தின் வீடு
   எம் வீடு எப்போதும் ஆதரவற்றவர்களுக்கு இரக்கம் செய்யும் இடமாக இருக்கிறதா? சிந்திப்போம்

இன்று குடும்பங்கள் இப்படியாக இல்லை. குடும்பத்தில் அன்பும் பகிர்ந்து வாழுதலும் தான் சிறப்பு என வள்ளுவ பெருந்தகை திருக்குறளில் 5ம் அதிகாரத்தில் 45 ம் குறளில்
"அன்பும் அறனும் உடைத்தாயின் இல் வாழ்க்கை
பண்பும் பயனும் அது" எனக் கூறுகின்றார்.
ஒருவன் தன் துணைவி மேல் கொள்ளும் அன்பினையும், தன் அயலானுக்கு பகிர்ந்து வாழ்தலும் தான் உண்மையான குடும்ப வாழ்வு. ஆனால் இதை இன்று காண முடிவதில்லை. "திருக்குடும்பங்கள் தெருக்குடும்பங்களாக" மாறி விட்டது. குடும்பங்கள் தெருவுக்கு வந்ததால் குடும்ப வாழ்வு சாக்கடையாக மாறிவிட்டது. அன்புகொண்டு மகிழ்ச்சியாக வாழ வேண்டிய குடும்பங்கள் பிரிந்து சண்டை போட்டுக்கொண்டு நீதிமன்றங்கள் ஏறி இறங்கி, ஏன்! விவாகரத்து எடுப்பதற்குக் கூட தயாராகிவிடுகின்றன. குடும்பங்களை குடும்ப வாழ்வை அலட்சியம் செய்யும் போக்கு வளர்ந்து வருகின்றது. இந்நிலை மாற வேண்டும். குடும்ப வாழ்வு புனிதமானது. அதை மதிக்க தெரிய வேண்டும். சிறு வயதில் திருமணம் செய்துவிட்டு குடும்பம் என்றால் எப்படி என்று தெரியமால் வாழ்பவர்களினால் குடும்பத்திற்கு இழுக்கு ஏற்படுகின்றது. இதனை மாற்ற ஆயத்தப்படுவோம்.
குடும்பங்களுக்கு முன் உதாரணம் இயேசுவின் குடும்பமாகும். இக் குடும்பம் ஒருவரையொருவர் மதித்து அன்பு செய்து வாழ்ந்தவர்கள். கானவூர் திருமணத்தில் கூட தாயின் சொல்லை தனயன் தட்டவில்லை. சிறுவயது முதல் இயேசுவை ஜெபாலய வழிபாடுகளிலும் பஸ்கா பண்டிகை காலங்களில் எருசலேம் தேவாலயத்திற்கும் போக தவறுவதில்லை. சிறு பராயத்தில் கற்றுக் கொண்ட ஜெப வாழ்வு தான் சிலுவை சாவின் நேரத்திலும் பிறருக்காக ஜெபித்ததைக் காணுகின்றோம். ஆனால் இன்று இயேசுவை இல்லத்தின் தலைவனாக கொண்ட நாம், எமது குடும்பம் எப்படி வாழ்கிறது? இதைக்குறித்து சிந்திக்க வேண்டும். சிந்திப்போம் செயற்படுவோம்.

DSM

பிறந்த நாள் வாழ்த்துக்கள்.

இம்மாதம் பிறந்த நாட்களைக் கொண்டாடும்
அனைத்து உறவுகளுக்கும்
உதய தாரகை
தன் இதயம் கனிந்த நல்வாழ்த்துக்களைத்
தெரிவித்துக் கொள்கின்றது.

## வாலிபர்/சிறுவர் பகுதிகள்

அன்பு வாலிபர்களே! சிறுவர்களே! வருகின்ற வெளியீடுகளில் வாலிபர்கள் மற்றும் சிறுவர்கள் பகுதிகள் இணைத்துக் கொள்ளப் படவிருப்பதால் தங்கள் ஆன்மீக சம்மந்தமான ஆக்கங்களை அனுப்பி வைத்தால் அதனை பிரசுரிப்போம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம். ஆக்கங்கள் அனைத்தும் தங்களாலேயே ஆக்கப்பட்டது என்பதை தங்கள் குருவானவரினாலே சிபாரிசு செய்யப்பட்டிருக்க வேண்டும். உற்சாகமாக எழுதுங்கள். அதனால் தங்கள் திறமைகளை வெளிக்கொணருங்கள்.

## மூன்று காரியங்கள்

நமது வாழ்க்கையில் ஒரு முறை போனால் திரும்ப பெற முடியாத மூன்று காரியங்கள்
1. காலம்
2. வார்த்தைகள்
3. சந்தர்ப்பங்கள்

ஒரு மனிதனை அழிக்கும் மூன்று காரியங்கள்
1. கோபம்
2. பெருமை
3. மன்னியாதிருத்தல்

இழக்க கூடாத மூன்று காரியங்கள்
1. நம்பிக்கை
2. சமாதானம்
3. நேர்மை

மிகவும் அருமையான மூன்று காரியங்கள்
1. அன்பு (Love)
2. குடும்பமும் நண்பர்களும் (Family & Friends)
3. தயவு (Kindness)

நமது வாழ்க்கையில் நிலைத்திராத மூன்று
1. அதிர்ஷ்டம்
2. வெற்றி
3. கனவுகள்

ஒரு மனிதனை உருவாக்கும் மூன்று காரியங்கள்
1. கடமை
2. உண்மை
3. கடின உழைப்பு

நம் வாழ்க்கையில் என்றும் நிலைத்திருப்பவர
1. பிதா
2. குமாரன்
3. பரிசுத்த ஆவி

இவைகளில் எதை விட வேண்டுமோ அதை விட்டு எதைப் பெற வேண்டுமோ அதைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

# காக்கா ஏன் கறுப்பாச்சு?

(பர்மா நாட்டு நாடோடிக்கதை)



ரொம்ப காலத்துக்கு முன்னாடி காக்கா வெள்ளையா இருந்துச்சுதாம். வெள்ளைன்னா அப்படி ஒரு வெள்ளை. அப்ப எல்லாம் காக்கா ரொம்ப தூரம் பறக்குமாம். சூரியன் வரைக்கும் பறந்து போகுமாம். அப்படி இருந்த காக்கா எப்படி கருப்பாச்சு?

சூரியபூர் நாட்டோட ராஜாவுக்கு ரொம்ப வருஷம் கழிச்சு அழகான இளவரசி பிறந்தாங்கலாம். கொள்ளை அழகு. குழந்தையில இருந்து வீட்டை விட்டே வெளிய வரலையாம். நல்ல பெரியவங்களாகி கல்யாண வயசுல வெளிய விளையாட வந்தாங்கலாம். அவங்க பேரு அங்கிகா. அவங்க விளையாடறத பாத்த சூரியனுக்கு அவங்களை ரொம்ப பிடிச்சு போச்சாம். இளவரசிக்கும் சூரியனை பிடிச்சிடுச்சாம். தினமும் விடியற்காலையில எழுந்ததில இருந்து சூரியன் கிட்ட தான் பேசிட்டு இருப்பாங்கலாம். சூரியனும் பூமிய சுத்திக்கிட்டே இளவரசிகிட்ட பேசிட்டு இருந்ததாம். ரொம்ப நல்ல நண்பர்களா மாறிட்டாங்க. ஒரு நாள் சூரியன் இந்த இளவரசிக்கு பரிசு கொடுக்க நினைச்சுதாம்.

சூரியன் கிட்ட வரைக்கும் காக்கா பறந்துச்சு இல்லையா? அதனால சூரியன் ஒரு காக்காவ கூப்பிட்டு பையில சந்தனம், வாசனை திரவியங்கள், முத்து மாலை எல்லாம் கொடுத்து இளவரசிகிட்ட கொடுத்துடுன்னு சொல்லிட்டு மறஞ்சி போச்சாம். சாய்ந்திரம் ஆகிடுச்சுன்னா சூரியன் தூங்க போயிடும் இல்லையா? காக்கா அந்த பைய தூக்கிகிட்டு இளவரசி இருந்த அரண்மனைய நோக்கி பறந்து போயிட்டு இருந்துச்சாம்.

வழியில திருமண ஊர்வலம் போயிட்டு இருந்திருக்கு. நிறைய பழங்கள், உணவுப்பொருட்கள் எடுத்துட்டு போனாங்க போல. காக்காவுக்கு கொஞ்ச உணவாச்சும் கிடைக்குமேன்னு ஆசை. அரண்மனைக்கு போயிட்டு வந்தா தாமதமாகி போகும். சரின்னு அந்த பைய ஒரு மரத்தில மாட்டிட்டு திருமண ஊர்வலத்துக்கு போச்சாம். மரத்துக்கு கீழ இருந்த ஒருத்தன் இந்த காக்கா பைய வெச்சுட்டு போனதை பாத்துகிட்டே இருந்தானாம். நல்ல வாசனை வந்தது. அதனால மரத்தில ஏறி பைய திறந்து பாத்து இருக்கான். பைக்கு உள்ள சூரியன் கொடுத்து அனுப்பின எல்லா பொருளையும் பாத்து சொக்கி போயிட்டானாம். உடனே எல்லாத்தையும் எடுத்துகிட்டு மரத்தில இருந்த குப்பை எல்லாம் பையில எடுத்து போட்டுட்டு கிளம்பிட்டான்.

காக்கா நல்லா சாப்பிட்டு வந்துச்சாம். பைய எடுத்துகிட்டு இளவரசி அரண்மனைக்கு போயிடுச்சாம். அங்க இளவரசிகிட்ட சூரியன் கொடுத்த பைய கொடுத்துச்சாம். திறந்து பார்த்த இளவரசிக்கு அதிர்ச்சி. ச்ச..இந்த சூரியன் ஏன் இப்படி பண்ணிடுச்சு. என் மேல அன்பே இல்ல. எல்லாம் நடிப்பு. அவன் பேச்சு இனிமேல் டூன்னு சொல்லிட்டு பைய விசிரியடிச்சிடுச்சாம்.

மறுநாள் காலை, சந்தோஷமா இளவரசிய பார்க்கலாம்ன்னு வந்த சூரியனுக்கு தூக்கி வாரி போட்டுச்சாம். அந்த பை கீழ விழுந்திருந்தத பாத்தே ஏதோ தப்பு நடந்திருக்குதுன்னு புரிஞ்சிடுச்சாம். பயங்கர கோபம் வந்துடுச்சாம். காக்காவை பார்த்து கோவமா பாத்த உடனே வெள்ளையா இருந்த காக்கா கறுப்பா மாறிடுச்சாம். அதனால தான் சூரியன் கிட்டகூட பறக்க முடியாம போச்சாம். கிட்ட இருந்த சூரியனும் பூமி மேல கோபம் வந்து தூரமா போயிடுச்சாம்.

இப்ப தெரிஞ்சதா காக்கா ஏன் காக்கா கறுப்பாச்சுன்னு?

-நன்றி இணையத் தமிழ் உலகம்-

# இறையியல் கல்லூரிக்கு புதிய பதிவாளர்



மருதனார் மடம் கிறிஸ்தவ இறை யியல் கல்லூரியின் புதிய பதிவாளராக செல்வி. டயா னா பேரம்பலம் அவர்கள் அண்மையில் நடைபெற்ற CACM தர்மகர்த்தா சபைக்கூட்டத்தில் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் இம்மாதம் 16ம் திகதி முதல் தன்னுடைய பொறுப்பை கையேற்று பணியாற்றி வருகின்றார்.

இந்தியாவின் மதுரையில் உள்ள "லேடி டோக்" (Lafy Doak College) கல்லூரியில் பொருளியல் துறையில் (B.A in Economics with Specialization in Corporate finance) இளம் கலைமாணி பட்டத்தைப் பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் அமெரிக்கன் சிலோன் மிஷன் நகர் பணி திருச்சபையின; (City Mission) அங்கத்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமுதாய வாழ்வில் சமயச்சடங்குகளும், தூய்மைச்சடங்குகளும்

- அருட்திரு V.N. தர்மகுலசிங்கம் -

சமுதாய வாழ்வில் சமயச்சடங்குகளும், தூய்மைச்சடங்குகளும் முக்கிய இடம் பெற்றிருப்பதை யாவரும் அறிவோம். இச்சடங்குகள் பாரம்பரியமாக மக்களால் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. ஆனால் அச்சடங்குகளின் தோற்றம் பற்றிய அறிவு தரும் தேடல் போதுமானதாக இல்லை. காரணம் இவைகள் மதம் சார்ந்ததாக மதச்சடங்குகளாக நடத்தப்பட்டு வருகிறது. இன்றைய சூழலில் இது பற்றிய தேடல் மிகவும் அவசியம். சமுதாய சீர்குலைவிற்கு இச்சடங்குகள் முக்கிய காரணமாக இருக்கிறது. இதனைப் புரிந்து கொள்ள இக்கட்டுரை உதவும் என கருதுகிறேன்.

சமயச்சடங்குள், தூய்மைச்சடங்குகளுக்கான குறிப்புக்கள் இந்துமத புராணங்களிலும், பரிசுத்த வேதாகமத்தில் லேவியராகமத்திலும் இருக்கிறது. தூய்மையின் முக்கியம் பற்றிய கல்வி மத சார்பின்றி மாணவர்களுக்கு புகட்டப்படுகின்றது. சுற்றுப்புறச்சூழல், சுகாதாரம், உடற்கல்வி போன்ற பாடங்கள் முக்கியப்படுத்தப்பட்டு மாணவர்களின் அடிப்படை கல்வியாக போதிக்கப்படுகின்றது. மேலும் இப்பாடத்திற்கு மதச்சடங்காக நடப்பிக்கும் தூய்மைச் சடங்குகள் மூலம் தேவையான படிப்பினைகள் உண்டா? என்பது பற்றிய தேடல் இன்று நமக்குத் தேவை

## இந்து மத புராணங்கள் தரும் குறிப்புகளை நோக்குவோம்

ஆதிப்படைப்பாக ஆதி புருஷா என்னும் மனித உருவம் படைக்கப்பட்டது என்றும் அந்த ஆதி புருஷாவை தேவர்கள் யாக பலியாக செலுத்தினர் என்றும் அப்போது அதன் தலை, தோள், வயிறு, கால்கள் ஆகியவற்றிலிருந்து மனுக்குலம் தோன்றியது என்ற குறிப்புக்கள் உண்டு. இது பற்றிய விபரங்கள் தமிழில் "பிரபஞ்ச உற்பத்தி" எனும் நூலில் காணலாம். மேலும் இந்து மதக் கடவுளர்களின் தோற்றம் பற்றியும் எழுதப்பட்டிருக்கிறது. இது பற்றி மனு, பராசரர், யஜ்னகவல்லியோர் புராண விளக்கமாக குறிப்பிட்டிருக்கின்றனர். இதனால் வர்ணாசிரம தர்ம கோட்பாடு எழுந்தது. ஆதிபுருஷாவின் தலையிலிருந்து வந்தவர்கள் பிராமணர்கள் எனவும், தோளிலிருந்து வந்தவர்கள் சத்திரியர்கள் என்றும், வயிற்றிலிருந்து வந்தவர்கள் வைசியர் என்றும், காலிலிருந்து வந்தவர்கள் சூத்திரர் என்றும் கருதப்பட்டனர். இந்த நான்கு (சாதி) வர்ணத்தவர்களுக்குட்படாத சாதி உண்டு. அவர்கள் பஞ்சமர் என அழைக்கப்பட்டனர். இந்தியாவில் இன்று அவர்கள் தலித்துக்கள் என அழைக்கப்படுகின்றனர்.

மேற்கூறப்பட்ட ஜாதிப்பிரிவுகள் நிலைத்திருக்க அதற்கான சடங்குகள் உண்டு. பிராமணர், சத்திரியர், வைசியர் ஆகியவர்களின் பிள்ளைகள் பிறந்தால் ஜாதககர்மம், நாமகர்மம், அன்னப்பிரசன்னா, உபநயனம் என்னும் சடங்குகள் நடத்தப்படும். சூத்திரர்களுக்கு உபநயனம் தவிர்ந்த ஏனைய சடங்குகள் அவர்களுக்கு உண்டு. ஜாதககர்மம் - பிறந்த நேரம், நட்சத்திரம்: நாமகர்மம்- ஜாதிக்குகந்த பெயர் சூட்டல், அன்னப்பிரசன்ன- பால்சோறு ஊட்டுதல், உபநயனம் - பூநூல் அணிதல். உபநயனச்சடங்கின் போது பிராமணர்கள் முப்பிரிநூலும், சத்திரியர் பட்டுநூலும், வைசியர் ஒற்றை நூல் அணிவர். அது அவர்களது ஜாதிக்கான அடையாளங்கள். அவர்களது தொழிலிலும் வேறுபாடு உண்டு. பிராமணர்கள் அறிவு புகட்டுபவர்களாகவும், ஆலய பூசகர்களாகவும் இருப்பர். சத்திரியர்கள் அரசர்களாகவும் நாடு காக்கும் போர் வீரர்களாகவும் இருப்பர். வைசியர்கள் வணிகர்களாக இருப்பர். சூத்திரர் – பிராமணர், சத்திரியர், வைசியர் ஆகியோருக்கு பணிவிடை செய்பவர்களாக இருப்பர்.

தூய்மைச் சடங்கு நடத்தும் விடயத்திலும் வேறுபாடு உண்டு. பிராமணர்களுக்கு தூய்மைசடங்கு பத்து நாள் கடந்து பதினோராம் நாளும், சத்திரியர்களுக்கு பன்னிரு நாள் கடந்து பதின்மூன்றாம் நாளும் வைசியர்களுக்கு பதினைந்து நாட்கள் கடந்து பதினாறாம் நாளும், சூத்திரர்களுக்கு முப்பது நாட்கள் கடந்து முப்பத்து ஓராம் நாளும் என்று வகுக்கப்பட்டிருக்கிறது. இதன்படி பிராமணர்கள் உயர்குலத்தவர் என்பதையும், ஏனையவர்கள் அவர்களை விட தாழ்ந்தவர்கள் என்பதையும் தூய்மைச்சடங்கின் எண்ணிக்கை மூலம் வகைப்படுத்தி காட்டுகிறது.

இவ்வித ஜாதி வகுக்கும் முறை அர்மீனிய நாகரீகத்திலிருந்து நாடோடிகளாக இந்தியாவில் புகுந்த ஆரியர்களினால் உண்டானது. ஆரியரின் வருகைக்கு முன் இந்தியா திராவிட நாடாகவே இருந்தது. ஆரியர் இந்தியாவிற்குள் வருகை தந்தபோது இந்தியாவின் வட பகுதியில் திராவிடரிடையே தங்கள் செல்வாக்கை செலுத்தி மொழிக்கலப்புகளையும் இனக்கலப்புக்களையும் ஏற்படுத்தினார்கள். இதனால் அவர்கள் வட பாரம்பரியத்தார் என அழைக்கப்பட்டார்கள். ஆரியரின் செல்வாக்குக்கு உட்படாமல் தெற்கே வாழ்ந்த திராவிடர்கள் தென்பாரம்பரியத்தார் என அழைக்கப்பட்டார்கள். இந்த வடபாரம்பரியத்தைச் சேர்ந்த ஆரியர்கள் தங்களை பிராமணர் என்றும், சத்திரியர் என்றும், வைசியர் என்றும் உபநயனச்சடங்கின் மூலம் தங்களை அடையாளப்படுத்திக் கொண்டனர். தெற்கே வாழ்ந்த சூத்திரர்கள் திராவிடர் என அடையாளப்படுத்தப்பட்டனர். தமிழர் திராவிட வகுப்பைச் சேர்ந்தவர்கள். அவர்கள் தூய்மைச் சடங்கினை முப்பத்து ஓராம் நாளில் நடப்பித்து வருகின்றனர். இப்படியாக சாதிப்பாகுபாடு தூய்மைச் சடங்கின் நாட்களை வகுத்ததன் மூலம் நிலை நிறுத்தப்படுகின்றது. இப்படியாக தூய்மைச்சடங்கினை முப்பத்தோராம் நாளில் நடப்பிக்கும் போது அவர்கள் மனித ஜாதியில் நாலாம் ஜாதி அல்லவா? இதனை நாம் உணர்வு பூர்வமாக ஏற்றுக்கொள்ள முடியுமா? சிந்தியுங்கள்!

## பரிசுத்த வேதாகமத்தில் லேவியராகமம் தரும் சடங்குகள், தூய்மை சடங்குகள் பற்றிய குறிப்புக்கள்

லேவியராகமத்தில் 1 முதல் 7 அதிகாரங்களில் காணிக்கைப் பலிகளுக்கான சடங்குமுறைகள் தரப்பட்டிருக்கிறது. 8 முதல் 10 அதிகாரங்களில் சமயக் குருக்கள் திருநிலைப்படுத்தப்படுவதற்கான நெறிகளும் சடங்குகளும் தரப்பட்டிருக்கிறது. 11 முதல் 16 வரையுள்ள அதிகாரங்களில் உணவுக்கேற்ற விலங்குகள் எவை என அதற்கான குறிப்புக்கள், பேறு காலத்தில் பெண்கள் கடைபிடிக்க வேண்டிய தூய்மை விதிகள், பாலியல் ஒழுக்கம் பற்றியன மற்றும் பாலியல் குற்றங்கள் எவை என சுட்டிக்காட்டுகிறது. தூய்மை, சமூக நீதி என்பன சடங்குகளில் வெளிப்பட வேண்டும். தூய்மை கடைப்பிடித்தல் இறைவனுக்கு கீழ்ப்படியும் செயல் என்றும், தூய்மை கடைப்பிடிக்காத செயல் (பாவச் செயல்) இறைவனுக்கு கீழ்ப்படியாத செயலாகவும் கருதப்படுகிறது. ஏனைய அதிகாரங்களில் பண்டிகைகளையும் அதனை அனுசரிக்கும் முறை பற்றியும் விளக்கப்படுகிறது.

இவைகள் சமூகத்தை சீர்குலைக்கும் சடங்குகளாகவோ, போதனைகளாகவோ கருதமுடியாது. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தூய்மை பற்றி தனது போதனையில் புறத்தூய்மையிலும் அகத்தூய்மை மேலானது என போதித்தார். புறத் தூய்மையின் முக்கியத்துவம் பற்றி யாவரும் அறிந்திருக்கிறார்கள். அதனைக் கற்றுக்கொள்ள மதம் என்ற பெயரில் சடங்குகள் தேவையில்லை. அகத்தூய்மை நமது தீச்செயல்கள் (பாவம்) அற்றுப்போகும் வரை தேவை. அதற்கேற்ப அகத் தூய்மையைப்பற்றி கற்றுக்கொடுக்கும் மதச் சடங்குகளோ அல்லது மதச்சார்பற்ற சடங்குகளோ உண்டு என்றால் அதனை நடைமுறைப்படுத்த முன்வருவோமாக.

# உதய தாரகை பத்திரிகையின் உன்னதமான வரலாறு 4

- கடந்த இதழின் தொடர்ச்சி -

## அமெரிக்க மிஷன் சங்கத்தின் முதல் இரத்த சாட்சிகள்

நியூவெல் ஐயரும் மனைவியும் மிகவும் இள வயதான வாலிபர்கள். ஆண்டவர் இயேசுவினுடைய "நீங்கள் உலகமெங்கும் சென்று நற்செய்தியை இறிவியுங்கள்" என்ற அன்பின் கட்டளைக்காக தம்மை அர்ப்பணித்தவர்கள். நியூவெல் அவர்களுடைய மனைவி ஹரியற் அட்வூட் அவர்கள் அமெரிக்காவிலிருந்து பயணத்தை ஆரம்பித்தபோதே கர்ப்பவதியாக இருந்தவர். எவ்வளவு துணிவும் அர்ப்பணிப்பும்? "கர்த்தர் எல்லாவற்றையும் பார்த்துக் கொள்வார்" என்ற துணிவுடன் பயணப்பட்டவர்களுக்கு இந்தியாவில் தடை. இப்போது மொறிசியஸ் தீவுக்கு பயணப்படுகையில் நடுக்கடலில் கப்பல் பழுதுபட்டு விட்டது. அத்துடன் கடலில் புயல். கப்பலை திருத்துவதற்கு "கொறிங்கா" (Coringa) எனும் துறைமுகத்துக்கு கொண்டு சென்றனர். இப்போது ஹரியற், நியூவெல் அவர்களின் வாழ்க்கையிலும் புயல் அடித்தது. ஹரியற் ஒரு பெண் பிள்ளையை கப்பலினுள் பிரசவித்தாள். சில நாட்கள் தாயும் சேயும் சுகமேயிருந்தனர். பின்னர் காற்றினால் தாக்கப்பட்டு குழந்தை கப்பலினுள்ளேயே மரித்து கடலிலே அடக்கம் செய்யப்பட்டது. ஒன்றுமே அறியாத இக் குழந்தையே இன்று 2010ம் ஆண்டு 200வது ஆண்டை வெற்றியுடன் கொண்டாடிய ABCFM எனும் அமெரிக்க சங்கத்தின் முதல் இரத்தச் சாட்சியாக தன்னை அர்ப்பணித்துக் கொண்டாள். பெயர் கூட இல்லாத பெண் குழந்தை இவர்.

பின் கப்பல் பயணமாகி மொறிசியஸ் தீவை அடைந்தது. ஹரியற் அம்மாளின் வருத்தம் அதிகப்பட்டது. போதிய மருத்துவ வசதிகள் இருக்கவில்லை. இறுதியில் இந்த இளம் மிஷன் தொண்டரான திருமதி. ஹரியற் அற்வூட் நியூவெல் அவர்கள் மொறிசியஸ் தீவிலே 1812ம் ஆண்டு (பயணமான அதே ஆண்டு) கார்த்திகை 30ம் திகதி கர்த்தருக்குள் நித்திரையடைந்தார். 21 வயது பெண்! என்னே துணிவு. அளவிடப்பட முடியாத அர்ப்பணிப்பு! இவரால் எந்த ஒரு இடத்திலும் நற்செய்தியை அறிவிக்க முடியவில்லை, எந்தவொரு மக்களையும் கிறிஸ்துவின் பாதையில் வழிநடத்த முடியவில்லை. அதிக துக்கமான மரணம்.

ஹோல், றைஸ், நொற், நொற் அம்மா ஆகியோர் தன் பிள்ளையையும் அருமை மனைவியையும் இழந்த நியூவெல்லுக்கு ஆறுதல் கூறினர். எப்படி ஆறுதல் அடைவது? கடவுளுடைய கிருபையால் நியூவெல் சோர்ந்து போகவில்லை. மிஷன் பணியிலிருந்து பின்வாங்கவில்லை. தாயும் பிள்ளையும் இரத்தச் சாட்சியாக மரித்த செய்தி அமெரிக்கா தேசத்தை எட்டியது. ஹரியற் அம்மா யாரையும் கர்த்தருடைய வழியில் நடத்தாவிட்டாலும் இவர் தன்னுடைய மரணத்தினாலே அமெரிக்காவில் அநேகருடைய உள்ளங்களில் மிஷன் பணிக்கான அனலை மூட்டி விட்டார். அநேகம் பெண் பிள்ளைகள் தம்மை மிஷன் பணிக்காக ஒப்புக் கொடுத்தனர். அனேகமாயிரம் பேர் தாராளமாக மிஷன் பணிக்கு மனம் திறந்து கொடுத்தனர். Mr.Mary Norris எனும் ஓர் பெண் தன்னிடம் இருந்த முழுப்பணத்தையும் (1812ம் ஆண்டு 90,000 அமெரிக்க டொலர்) இப்பணிக்கென்று காணிக்கையாக கொடுத்தாள்.

அதே வேளை "ஆண்டவரே நீரே என்னை அழைத்தீர், உம் சித்தப்படி நான் எங்கு போக சித்தமாயிருக்கிறீரோ அங்கு என்னை அனுப்பும்" என்று நியூவெல் தன்னை தொடர்ந்தும் மிஷன் பணிக்கென்று ஒப்புக் கொடுத்தார்.

- தொடரும் -

(ஏமெஸ்ரி)


# திருமண சேவை

அன்பின் தாரகை வாசகர்களே!
இன்று கிறிஸ்தவ குடும்பங்களின் பல பிள்ளைகளுக்கு ஏற்ற காலத்தில் பொருத்தமான துணைகளை தேடிக்கொள்வதில் பல சிரமங்கள் உள்ளன. இதனால் பல பிள்ளைகள் தம் விசுவாச வாழ்வை இழந்துள்ளனர். இதனை உணர்ந்து இப்பத்திரிகை மூலம் ஓர் பொருத்தமான துணையை தேடிக்கொடுக்கும் சேவையை செய்ய முயற்சிக்கின்றோம்.

ஆகவே தேவையில் உள்ளவர்களின் விபரங்களை உங்கள் போதகருக்கூடாக எமக்கு அனுப்பி வைக்கவும்.

1977ம் ஆண்டு பிறந்த வட்டுக்கோட்டை CACM திருச்சபையைச் சேர்ந்த மணமகளுக்கு மணமகனைத் தேடுகின்றார்கள்.
தொடர்புக்கு:- 0773612249


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2

# Theology of Conflict

*(In the perspective of Prophet Jeremiah) by Rev.J.Thevaarudselvam*

### The international Situation

A three cornered contest for the world supremacy was on Assyria, Babylon and Egypt. For 300 years Assyria had ruled the world; but now was growing weak, But Babylon was becoming powerful. Egypt which thousand years before had been a world power had declined was again becoming ambitious. Babylon won about the middle of Jeremiah's ministry. It broke the power of Assyria in 607 B.C and two years later crushed Egypt in the Battle of Carchemish in 605 B.C. For seventy she ruled the world; during these years Jews were under captivity of Babylon.

### Jeremiah's Calling & Life

Jeremiah was born into a priestly family living at Anathoth about five miles north-east from Jerusalem. The date of his birth is unknown, but is put conventionally middle of 7th century B.C. The only information that we have is the prophet's reaction to his call by Yahweh, where we could translate his words either 'I am only a boy 'or 'I am too young'. The term used in Hebrew, na e ar, can in fact have both meanings and is used to indicate either children or men already capable of bearing arms. In fact Jeremiah's answer does not indicate any particular age, but merely affirms that has not yet reached a sufficient age to have the authority which seems inseparable from the prophetic ministry. The 13th year of Josiah is given as the date of his calling (1:1; 25:3). The words addressed to him in the act of his calling are typical definition of the prophetic ministry; he is to pluck up and to break down to destroy and to overthrow, to build and to plant (1:10).

Traditionally three periods are distinguished in Jeremiah's life. The first is during the reign of Josiah, in the 13th year of which the prophet is said to have received his calling; this is either 626-5 or 627-6. This period must have lasted more or less up to the period of the reform in 622/21. The second period was in the reign of Jehoiakim, probably from its beginning, i.e., from 609 onwards. The last period was in the interregnum between the 1st fall of Jerusalem, in 587 with the event following carried off Jeremiah with the rebels when they took refuge in Egypt, where he died.

### Jeremiah's Message and advice

Jeremiah unceasingly insisted that Babylon would be the victor. All through his incessant and bitter complaints over Judah's wickedness, these ideas are even recurring, as follows;

a) Judah is going to be destroyed by victorious Babylon

b) If Judah will turn from her wickedness, somehow, God will save her from destruction at the hands of Babylon.

c) Later, when there seemed no longer any hopes of Judah's repentance, if Judah submits to Babylon she shall be spared.

d) Judah destroyed, shall recover, and yet dominate the world.

e) Babylon destroyer of Judah shall be destroyed.

As Jeremiah unceasingly advised Jerusalem to surrender, to the king of Babylon so much that his enemies accused him of being a traitor. Nebuchadnezzar rewarded him for thus advising his people, not only sparing his life, but by offering any honour that he would accept, ever a worthy place in the Babylonian-Court (39:12). Yet Jeremiah cried aloud that the king of Babylon was committing a heinous crime in destroying the Lord's people and for that in time Babylon would be desolated (Chaps 50, 51).

(Continue in the next issue)

# True Joy is in Jesus

In the modern world the wprd "progress" is quire familiar to each and every human being. No doubt the wonderful achievement of man in the field of science and technology., more in the field of medical science have made our lives happier and easy. But must all accept the fact that there is one thing that is slipping from us. What is it? Joy and Peace. This sense of loss is obviously seen in our words and deeds.

The Holy Bible asks "For what will it profit them if they gain the whole world but for feit their life" (Mt:-16:26) In our struggle for worldly pleasure we have lost all. We must all remember that both joy and peace are gifts of God. As we have failed to give God the primary Place in our life, there is the hollow of emptiness.

No doubt we are longing for permanent peace in the country but things are happening vice versa. There is a vacuum in each person's mind. Until and unless we immerse ourselves in Jesus, our hearts will be restless. According to the Bible (Jn:- 4:1-26) the Samaritan woman had found pleasure in Sin and immorality. But when she found that real joy can be found only in the Son of God, she relinquished her former sinful behaviour.

The Holy Bible presents another story. Zacchaeus had worshipped wealth and thus lived quite apart from God and his brethren. (Lk:-19:1-10) Says that when he realised he has been hanging on the twinges that would never give him true joy and peace, he embraced Jesus and found joy and peace that were eluding him.

Furthermore a good example is provided by the parable of the prodigal son. The prodigal son ignored paternal affection and went away to a far off place to look for pleasure in a life of dissipation and butchery. A sense of loneliness gripped him. Hence when he got back, he was able win back his father's lost joy.

If Jesus is with us, we can enjoy peace and happiness in the midst of crises. (Jer:-17:8) Says "They shall be like a tree planted by water, sending out its roots by the stream. It shall not fear when heat comes and its leaves shall stay green". St.Paul and Silas could sing hymns of praises to the Lord even when they were in chains in the dungeon. Even though St.Paul was in the midst of trials and challenges, even though St.Paul was being chained hand and foot even though he was severely guarded by an army personal, how was he able to write twelve prayer books? We say that hardly we find time to pray - giving false and lame excuses for not praying.

We must all keep in our minds that prayer is the only chain to communicate with God in order to achieve solace in life. If we want to have real joy we should place Jesus first in our lives. "In your hearts sanctify Christ as Lord"(I Peter:-3:15). God does not wish anybody to be sad and sorrowful. In the Bible we read "Blesses are you when People revile you and persecute you and utter all kinds of evil against you falsely on my account. Rejoice and be glad for your reward is great in heaven, for in the same way persecuted the prophets who were before"(Mt:-5:11-12)

Hence let us find joy even in the midst of trials and tribulations. If we have faith and trust in the Lord Almighty, there is no doubt that he will deliver us from all evils. "Though the fig tree does not blossom, and no fruit is on the vines, though the produce of the olive fails and the fields yield no food, though the flock if cut off from the fold and there is no herd in the stalls, yet I will rejoice in the Lord"(Hab:-3:17)

# CACM J/Regional Chairperson's Visit to Canada

Rev.V.Rajkumar (Chairperson J/Region) and his wife Thevakumari Rajkumar made a holiday visit to Canada. They were at Canada from 24th of July to 28th of August. They visited their relations and Jaffna church members in Canada and had discussion with them. They also visited some Tamil churches in Toranto and Rev.V.Rajkumar preached the sermons in St.Margerat's Amglican Tamil church, United church of Canada and Free Methodist Tamil church. In their visit they collected a good some of money for the Religious Education work of the J/Region.

**Contributers' List**

| | | | |
|---|---|---|---|
| 1) | Mr.&Mrs. Edward Mutturajah | - | 500 Canadian Dollar |
| 2) | Mr.&Mrs. S.Vinothkumar | - | 200 Canadian Dollar |


(In memory of Late Mr.A.R.Kadirgamar)

| | | | |
|---|---|---|---|
| 3) | Mr.&Mrs. K.Gnanaranjan | - | 150 Canadian Dollar |
| 4) | Mr.&Mrs. S.Ratnarajah | - | 100 Canadian Dollar |
| 5) | Mr.&Mrs. Ashok Jeevaganthi | - | 100 Canadian Dollar |
| 6) | Mr.&Mrs. Ravi Soundararajah | - | 100 Canadian Dollar |
| 7) | Mr.&Mrs. Nesan Jeevaganthi | - | 50 Canadian Dollar |
| 8) | Mr.&Mrs. S.Lyman | - | 50 Canadian Dollar |



Preaching at United tamil church, Scarborugh (4th August)

Preaching at St. Margarets Anglican church, Scarborugh (12th August)



Preaching at free Methodist tamil church, Scarborugh (19th August)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “பப்பா” காலம் ஆகிவிட்டார்”

திருவாளர் செல்பி அபயரட்ணம் சொலமன்ஸ் அவர்கள் மறுமைக்குள் பிரவேசித்ததைக் குறித்து நான் “பப்பா” காலமாகிவிட்டார் என்று கூறவில்லை. மாறாக “பப்பா” காலம் (He was a time/ an eara) ஆகிவிட்டார் என்று கூற விரும்புகிறேன்.

திருவாளர் S.A.சொலமன்ஸ் அவர்களை அதிகமானவர்கள், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப் பிள்ளைகளோடு இணைந்து “பப்பா” என்றே அன்போடு அழைப்பார்கள்.

திருவாளர் S.A.சொலமன்ஸ் அவர்களுடைய வளர்ச்சியையும் உயர்ச்சியையும் குறித்து சில வார்த்தைகள் :- இவர் யாழ்ப்பாணத்திலே கல்வியில் புகழடைந்து காணப்பட்ட சுண்டுக்குளியிலே திரு சாம் தம்பித்துரை சொலமன்ஸ் அவர்களுக்கும் திருமதி. லில்லி தம்பித்துரை சொலமன்ஸ் அவர்களுக்கும் மூத்த மகனாக 1928ம் ஆண்டு ஜூலை மாதம் 30ம் திகதி பிறந்தார். இவருக்கு இரண்டு சகோதரர்களும் இரண்டு சகோதரிகளும் உள்ளனர்.

இவர் தன்னுடைய கல்வியை இலங்கையிலேயே புகழ் பூத்த கல்லூரிகளான பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியிலும் யாழ்ப்பாணம் பரி.யோவான் கல்லூரியிலும் கற்றார். கல்வி கற்கும் காலங்களிலேயே மிகவும் சிறந்த மாணவனாக திகழ்ந்த இவர் கல்லூரிப் படிப்பை நிறைவு செய்ததும் “றோயல் நேவி” (Royal Navy)யில் இணைந்து உலகின் பல பாகங்களிலும் கடமையாற்றினார். பின்னர் திருமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் சீனித் தொழிற்சாலையிலே மிகவும் உயர்ந்த பதவிகளை அலங்கரித்து அனேகருக்கு அன்பானவராகவும் கடமையுணர்வு உள்ளவராகவும் கடமையாற்றினார்.

இவர் தனது வாழ்க்கைத் துணைவியாக சாவகச்சேரியில் புகழ் பூத்த குடும்பமான திரு.திருமதி. K.P. வேதநாயகம், மற்றும் ஈதெல் வேதநாயகம் அவர்களின் மகளான பிறிம்றோஸ் அற்புதமணி அவர்களைத் தெரிந்து கொண்டு 8 ஆண்பிள்ளைகளையும் 3 பெண் பிள்ளைகளையும் பெற்றெடுத்தார்.

1987 களிலே அவர்கள் பேராயர் அம்பலவாணர் அவர்களுடைய “கிழக்குப் பகுதியின் இறைபணி” எனும் தரிசனத்துக்கு உறுதுணையாக இருந்து, மட்டு-திருமலை பிரதான வீதியில் அமைந்த தங்களுடைய வீட்டுடன் கூடிய காணியை இறைபணிக்கென கொடுக்க முன்வந்தனர். பல ஆலோசனைகளையும் உதவிகளையும் செய்து மட்டக்களப்பில் தென்னிந்திய திருச்சபை உதயமாவதற்கு உறுதுணையாக இருந்தவர் திருவாளர் S.A.சொலமன்ஸ் அவர்களே!



பேராயர் அம்பலவாணர் அவர்கள் கிழக்குப் பகுதியில் இறைபணியை ஆரம்பிக்க ஏற்றவரென அவருடைய மகனான வண.ஏர்ள் பாக்கியசீலன் சொலமன்ஸ் அவர்களை 1989ம் ஆண்டு முதன் முதல் ” Pioneer Worker” ஆக மட்டக்களப்புக்கு அனுப்பினார். இவர்களுடைய இணைந்த ஆலோசனையிலும் முயற்சியிலும் அயரா உழைப்பினிலும் மட்டக்களப்பு, கிரான், கல்குடா, இறாலோடை, கதிரவெளி, கரடியனாறு, ஊறணி, பெரியநீலாவணை ஆகிய இடங்களில் திருச்சபை மையங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

1988 களில் கொழும்புக்கு குடும்பத்துடன் வந்த “பப்பா” அவர்கள் J.S.Group எனும் தனியார் நிறுவனத்தில் மிக முக்கியமான உயர் பதவியை வகித்து நீண்ட காலம் அரிய சேவையை இறுதிவரை (தன்னுடைய 84ம் வயது வரை) சிறப்பாக செய்து முடித்தார்.

அவர்கள் வத்தளையில் குடியேறிய காலங்களிலேயே வத்தளையில் ஒரு திருச்சபை உருவாக வேண்டும் என்றும் நமக்கென்று ஒரு ஆலயம் தேவை என்றும் உணர்ந்து செயற்பட்டனர். இவரும் அன்றியும் இணைந்து எடுத்துக்கொண்ட முயற்சியின் பலனே வத்தளை திருச்சபை என்றால் மிகையாகாது.

இவர்களுடைய குடும்பம் பெரிய குடும்பம் என்பது மட்டுமல்ல எப்போதுமே சந்தோஷமான குடும்பம். தாங்கள் மட்டுமல்ல தேவையில் இருப்பவர்களின் சந்தோஷங்களை கருத்தில் கொண்டு செயலாற்றிய குடும்பம். குறிப்பாக போதகர்மாருக்கும் அவர்களின் குடும்பங்களுக்கும் எப்போதும் உதவுகின்ற குடும்பம். தங்கள் வீட்டிலேயே வழிபாடுகளை நடாத்த எப்போதும் அனுமதித்த குடும்பம். இவர்களுடைய இல்லம் ஒரு கோயிலாகவே திகழ்ந்தது, வழிபாட்டுக்கு மட்டுமல்ல அநேகர் வந்து ஆறுதல் பெற்றச் செல்வதுற்குமாகும். இதனை வாசிக்கின்ற அநேக ஆத்துமாக்கள் இதற்கு சாட்சிகளாக இருப்பார்கள் என்பது எனது நம்பிக்கை.

அன்றியும் அங்கிளும் அன்புள்ளம் கொண்டவர்கள். இரக்க சிந்தையுடன் பலருக்கு விளம்பரமின்றி உதவி செய்த உதாரண புருஷர்கள். அதனாலேயே அவர்களுடைய பிள்ளைகளையும் அவர்களது குடும்பங்களையும் கடவுள் குறைவின்றி நிறைவாக ஆசிர்வதித்துள்ளார்.

பல தடவைகள் நான் கண்ட உண்மை - இவர்கள் கண்டிப்பானவர்கள். கண்டித்து யாராக இருந்தாலும் நேர்மையுடன் புத்தி கூறுபவர்கள். நல்ல ஆலோசகர்கள். இறுதிவரை அவர்களுடைய பிள்ளைகளுக்கும் மருமக்களுக்கும் “பப்பா” தான் அப்பா. எல்லோருமே அவரிடம் கேட்டுத் தான் செயலாற்றுபவர்கள்.

பெரிய பணியை கடவுள் அவரிடம் ஒப்புவித்திருந்தார். அதை சந்தோஷமாக ஏற்று நிறைவோடு செய்து முடித்தார். இப்போ தந்தையாம் கடவுளோடு இளைப்பாறச் சென்றுவிட்டார். இதுவே எமது ஆறுதல்.

அன்புடன் ஏயெஸ்ா

## அன்பான பெரியப்பா

பூக்கள்
புன்னகைத்தால்......
அதுதான் பெரியப்பா
உங்கள்
முகமலர்ச்சிக்கு
உகந்த உவமை.

பட்டாம் பூச்சி
சிறகடித்துப் பறப்பது போல்
எப்போதுமே
கலகலத்துப் பேசி
அருகிலிருப்பவரையும்
ஆனந்தப்படுத்தும் குணம்.

இணைபிரியாத
இல்லறவியலுக்கு
உங்கள் வாழ்க்கை தான்
ஒப்பற்ற உதாரணம்.

பெரியப்பா.........
பெரியம்மா.........
நீங்கள் விருட்சங்கள்
அதில் விழுதுகளாய்
கூடுகட்டி வாழும்
குஞ்சுகளாய் நாங்கள்.

காலங் காலமாய்
நிகழப் போகும்
பரம்பரை வரலாற்றில்
நீங்களும் ஒரு
காலச் சுவடுதான்.

யேசுவின் ஆசீர்வாதத்தால்
அழியாப் பேரின்பத்தில்
உங்கள் ஆத்மாக்கள்
ஆனந்திக்கட்டும்.

றோய் விஜயரட்ணம், குடும்பம்

## Your loving grandson Noel Ranushan Sathiyaseelan Solomons.

My grandfather was a great man. He is my hero. When I went to Sri Lanka this year, around July. He would be the happiness to my day he would come out side and laugh about something funny we did. I remember when we took papa to the beach to play with me and my brothers played with papa and we enjoyed it. We went swimming and papa was laughing with us. For papa's birthday we had a big birthday party he had a smile on his face. He would like to sing along with us. He would be missed from his sons, daughters, grandsons, granddaughter and great grandchildren and me! Bye papa.

## On behalf of our entire family, Sivanesan (son-in-law) and Nimalini (daughter), Suthan (grandson), Jeyalathy (granddaughter-in-law) and Asha (great granddaughter), Thushyanth (grandson) and Denise (granddaughter-in-law), and Renuka (granddaughter), we will greatly miss Grandpa and he will live forever in our hearts.

Often people dwell on the passing of life, and although we are very sad that Grandpa is no longer with us, we take comfort in knowing he lived a remarkable life, one that has inspired us greatly. Growing up in Canada, we didn't have the luxury of having our grandparents with us. It was not until 2006 when we had the pleasure of meeting Grandpa when he visited Canada from Sri Lanka. It was a visit that we will never forget and will always cherish. In such a short period of time, he deeply affected us all. His adventurous attitude, his broad range of interests and his happy demeanor made him a wonderful person to know and converse with. He was patient and generous with his time and affection. He always took an interest in people he met and had a great philosophical approach to life. Even having lost his wife, our grandma a few years back, he always spoke about her with such admiration and love, as if she was still there with us. He was very proud of each his own children, his grandchildren and great grandchildren. He shared his philosophy on how to meet and overcome challenges and obstacles. His strength of character in the various challenges he faced in life were often evident in his many stories and adventurous. We will miss his humour and surprising depth and scope of knowledge. Most of all we'll miss the warmth he extended to everyone he met around him and how special he made us all feel. We feel honored and privileged to have met Grandpa.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 1928 07 30

மறைவு 2012 08 21

ஆலமரமாய் நீ இருந்து
அனைவரையும் அரவணைத்தாய்!
ஆர்வமுடன் விருந்தோம்பி
ஆசை மொழி பேசிநின்றாய்!
இன்று எம்மை எல்லாம் ஆறாத்துயரத்தில் ஆழ்த்தி
விண்ணகம் சென்ற எம் அன்புத் தந்தைக்கு
எம் கண்ணீர் துளிகள் சமர்ப்பணம்!
அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு
எம் ஆழ்ந்த அனுதாபங்கள்.
மாசிலாமணி குடும்பம்
வவுனியா

# PAPA



It's So Hard To Believe That You're Really Gone
And To Know That We Will No Longer
See Your Smiling Face,
Or Hear The Sound Of Your Laughter
You Left So Many Memories, Which Will Never Part
You Will Always Live Deep Inside Our Hearts
We Are Thankful That God Graced Us
With Someone As Special As You
It's Just Hard To Believe
Your Life On Earth Is Really Through
We miss you a lot…….



**From your ever loving Grandchildren**
**Shanika and Duke (Earl)**

## சொலமன் அத்தான்

*அத்தான்*
*சிறுமியாய்*
*உங்களைக்*
*கண்ட நாளிலிருந்து*
*சின்ன சின்ன நினைவுகளாய்*
*பெருகிப் பிரவாகிக்கிறது*
*ஞாபக அலைகள்.*

*இல்லார்க்கு*
*ஈகின்ற குணமும்*
*இனியதாய் பழகுகின்ற*
*இளகிய மனமும்*
*எல்லோரிடமும் உன்னதமாய்*
*உறவுகொள்ளும் உள்ளமும்*
*உங்கள் உறவுகளறிந்த*
*உயர்ந்த பண்புகளிவை.*

*நினைவுகள் மங்கிய*
*நிலையினில் கூட*
*நீங்கள் வாழ்த்திய — என்*
*பிறந்தநாள் வாழ்த்து*
*இன்னும் கேட்கிறது*
*என் காதுகளில்.*

*காலம் வந்த போது*
*கர்த்தர் கவர்ந்து*
*சென்றார் உங்களை*
*ஆண்டவரின் அரவணைப்பில் -*
*உங்கள்*
*ஆத்மா ஆழ்ந்த*
*அமைதியடையட்டும்.*
*-அற்புதராணி வேதிங்டன். -*


## Grandpa

We know you can no longer stay with us,
You fought long and hard to be with us,
We know you now watch over and protect us,
Although we cannot hear your voice or see your smiling face,
We know deep down in our hearts that you have not left us.
Instead everybody you surround us with the singing of the birds,
the rising of the sun and the falling of night,
So many broken hearts are left behind,
But in our deepest despair our greatest comfort lies knowing
that you are now at peace with the angels and God.
So as times passes our tears will dry,
Our hearts will mend
But our love for you will never end.

**Your ever loving Jessie, Sana and Chutty Solomons (Prince)**

வத்தளை திருச்சபையின் ஆரம்ப கால உறுப்பினரும், கிழக்குப் பிராந்திய திருச்சபைப் பணிகளின் ஆரம்பத்திற்கு ஊன்றுகோலாக இருந்தவருமாகிய அமரர் S.A.சொலமன்ஸ் அவர்கள் 21-08-2012 அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார். அன்னாரது ஆன்மா நித்திய இளைப்பாறுதலடைய பிரார்த்திப்பதுடன் குடும்பத்தினருக்கும் தாரகையின் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்ளுகிறது.

## சொலமன் பெரியப்பா



'சொலமன்' என்று சொன்னாலே -உங்கள்
புன்னகை பூத்த முகம் தானே — எங்கள்
கண்களில் விம்பமாய் விழுகிறது.

உறவுகளுக்குக் கொடுப்பதிலும்
உறவு கொண்டணைப்பதிலும்
'அமுதசுரபி' தான்
அடிக்கடி எம் மனங்களில்
நினைவுக்கு வருகிறது.
'வெறுங்கை' என்ற
வார்த்தை உங்கள்
வாழ்க்கை அகராதியில்
வரமுடியாமல் தோற்றுப் போனது.

'பிறிம் றோஸ்' பெரியம்மா.
ஒரு ரோஜா மலர் கொண்டு
பெரு நந்தவனத்தையே
உருவாக்கிய பெரியப்பா.

உடல்கள் பிரிந்தன
உறவுகளை விட்டு
உங்கள் குரல்கள் கேட்கின்றன
எங்கள் உயிர்வரை தொட்டு
'தங்கச்சி'... 'பிள்ளைகள்'... - என
பிரியமாய் நீங்கள் அழைப்பதாய்
காற்றின் அலைவரிசை — எம்
காதின் அருகே மீட்டுச்செல்கிறது.

இங்கே
கல்லறை மடியில் - எங்கள்
கலங்கரை விளக்கமாய் ஒளிருங்கள் ...!
அங்கே
ஆண்டவன் அடியில் - நீங்கள்
அமைதியாய் துயிலுங்கள் ...!

தேவி அன்ரி குடும்பம்

## Your loving Grandson Praveen Jeroshan Sathiyaseelan.

My grandfather was a spectacular man with many wonderful characteristics. He was my hero and role model on how I should live. He lived with only one thing in mind as his goal - to be a family man who loves every one of his children, his grandchildren, and great grandchildren. I am very fortunate to have a grandfather like him. I am also glad that I have seen him a few times and enjoyed every single moment with him. He was always full of joy and happiness to see me and my younger brothers.. He took us to the beach and to a lot of great places in Sri Lanka. But it wasn't the places that made visiting Sri Lanka fun, it was the paople we spent it with - and that was pap! You would never see him without a smile on his face. Even till his last days, whenever he looked at me, he would smile and call my name with great affection. I will never forget all the time he spent with me and my brothers, and all the things he has done for us. He is a one of a kind dad, grandfather, and great grandfather. Wherever papa went, whether it may by Sri Lanka, Canada, India, Australia, Switzerland and many other place, his love and memories will remain with us all over the world. I am proud and honoured to know such a man like my grandfather. I know that he has left me. but he also left apart of him with me. I have learned a lot about my grandfather and the way he lived his life - a life without regrets. I am going to miss you papa - may you rest in peace and among angels. I pray that you keep a watch over all our families and friends and may we live our lives the way you did. Papa you will be missed.

5ம், 6ம் பக்க நினைவலைகள் கட்டணம் செலுத்தப்பட்டு பிரசுரிக்கப்பட்டவையாகும்.

## Kevin Dilashan Sathiyaseelan Solomons

My Grandpa was a nice and loving person. He was funny and kind hearted and always loved to make us smile and enjoy everything we did. My grandpa was in navy and in world war two and this makes me have a lot of respect for my grandpa. He loves to sing and dance with me and loves to hear my singing. Every time I see my grandpa, he is always smiling and I am sure tahat he is looking down at all of us and smiling. People say smiling is a sign of being nice, but to my grandpa smiling was the best way to show that he loved us. I am going to miss you papa! I will always love you papa, my grandfather, bye papa.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமறை+ திருச்சபை+அரசியல்=ஒடுக்கப்பட்டோரின் விடுதலை

(சென்ற இதழ் தொடர்ச்சி )

லூக்கா போதகர் - அக்கராயன்குளம்

ஏழையர்க்கும் வறியவர்க்கும் இறையரசு என்று உதட்டளவில் மட்டும் அவர்களைப் போற்றி திருப்தி கொள்ளும் வாய்ச்சொல் அரசியல்வாதியாக இயேசு இல்லை. மேலும் இயேசு வீணாக அதிகாரத்தில் உள்ளோர்க்கும் அஞ்சுவோராக வெளிப்படவில்லை. அவர் ஏரோதை குள்ளநரி எனக் கடிந்து விமர்சிக்கிறார். நாட்டின் அதிகாரியைக் குள்ளநரி என வெளிப்படையாக அடையாளப்படுத்திக் காட்டும் அளவுக்கு அரசியல் தொடர்பு இயேசுவிடம் இருந்தது. மேலும் பரிசேயர்களை 'குருட்டு வழிகாட்டிகள" "வெள்ளையடிக்கப்பட்ட கல்லறை" "கள்ளமிக்கவர்கள்' என வர்ணித்திருக்கிறார் (மத்23:13-32, மாற்12:40, லூக்20:47).

மேலும் இயேசு ஒருபோதும் நடுநிலைவாதியாக செயற்படவில்லை. அதாவது மதில் மேல் பூனையாக இருக்கவில்லை. மாறாக அநீதிக்கு எதிராகவும் நீதியின் சார்பாகவும் செயற்பட்டார். அது அவரது பணி முழுவதிலும் தெள்ளத் தெளிவாகின்றது. இயேசுவின் காலத்தில் யூதர்கள் தங்கள் அரசியல் உரிமைகளை இழந்த நிலையில் காணப்பட்டனர். எங்கும் ரோம பேரரசின் ஆக்கிரமிப்பு காணப்பட்டது. தமது இன அடையாளத்துவத்தை இழந்திருந்தனர். மேலும் புற இன மக்கள் தமது சமய உரிமைகளையும் சமூக உரிமைகளையும் இழந்து காணப்பட்டனர். ஆகவே ஒட்டு மொத்தத்தில் பார்க்கும் போது அங்கு உரிமைக்காக, தாம் இழந்து போன உரிமைகளை மீளப் பெற்றுக் கொள்வதற்காக போராடிய சமூகம் காணப்பட்டது. மேலும் ஆதிக்க சக்திகளுக்கு எதிராக செலோத்தையர் என்னும் ஆயுதம் ஏந்திய விடுதலைப் போராளிகளும் இழந்து போன உரிமைகளைப் பெற்றுக் கொள்ள போராடி வந்தனர். இத்தகைய சூழலில் தான் இயேசு தமது இறையரசு நிறுவுவதற்கான அகிம்சை வழி இயக்கத்தை பாதிக்கப்பட்ட மக்கள் சார்பாக முன்னெடுத்து வந்தார்.

பொது நலன்களுக்காக மக்களது இயக்கமாக அமைந்திருக்கும் திருச்சபையே ஓர் அரசியல் இருப்பு தன்னுடைய வளர்ச்சியில் திருச்சபை அரசியலை தன்னுள்ளும் தனக்கு புறம்பிலும் சந்தித்திருக்கிறது: உறவு கொண்டிருக்கிறது. சில கட்டங்களில் அரசியலுடன் சிக்கல்களை அனுபவித்திருக்கிறது. வேறு சில கட்டங்களில் அரசியலைப் புறக்கணித்து இருக்கிறது. தமக்கு அனைத்து அதிகாரங்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்று தேவைக்கு அதிகமான ஆதிக்க மோகத்தால் அரசியலை அடக்க முயன்ற தருணங்களும் திருச்சபைக்கு உண்டு. "ஆன்மீகம் வேறு அரசியல் வேறு" என்று பாகுபடுத்தி அரசியலை அணுகிய தருணங்களும் திருச்சபைக்கு உண்டு.

தொடக்ககால திருச்சபை உரோமைப் பேரரசின் ஆதிக்கத்திற்கு உட்பட்டிருந்தது. உரோமைப் பேரரசில் அரசியல் நடப்புக்களைப் பற்றிய திறனாய்வு செய்யும் உரிமை மக்களுக்கு தரப்படவில்லை. பேரரசனுக்குக் கீழ் ஆட்சி மன்ற உறுப்பினர்கள் அரசியல் நடப்புக்களை கவனித்தனர். லூக்கா தன் நூல்களைச் சமர்ப்பித்த தியோப்பிலு (லூக்1:1, திப1:10) என்பவர் இப்படிப்பட்ட ஓர் ஆட்சி மன்ற உறுப்பினராக இருந்தார் என்று அறிஞர்கள் கருதுகின்றார்கள்.

பவுல் ஆளுநர்களது குறைகளைக் கண்டிக்க தவறவில்லை. தலைமைக்குரு அனனியாவை வெள்ளையடிக்கப்பட்ட சுவரே என்றார் (திப23:3). நீதி, கற்பு, வரவிருக்கும் நியாயத்தீர்ப்புப் பற்றி ஆளுநர் பெலிக்சுக்கு பவுல் எடுத்துரைக்கத் தயங்கவில்லை (திப24:25).

மூன்றாம் நூற்றாண்டில் வாழ்ந்த அகுஸ்தினார் "கடவுளின் நகரம்" என்னும் தமது நூலில் உலகில் ஆட்சி முறைகள் எவ்வாறு அமைந்திருக்க வேண்டும் என் விளக்கியுள்ளார்.

நான்காம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இறைச் சமுதாயம் ஓர் கட்டுக்கோப்பான நிறுவனமாக மாறியது. இந்த நூற்றாண்டின் மத்திக்குள்ளாக இறைச் சமுதாய மரபுகள் தூய்மையானதாக உரோமையில் பாதுகாக்கப்பட்டுள்ளதாக கருதி உரோமை தலைமைப் பீடமாக ஆக்கப்பட்டது. எனவே உரோமை இறைச் சமுதாயம் அதிகாரம் இந்த காலத்தில் அதிகமானது. இக்காலத்தில் திருத்தந்தை வெறுமனே உரோமையின் ஆயராக இல்லாது திருச்சபைக்குரிய சட்டத்திட்டங்களை உருவாக்கும் அதிகாரம் கொண்டவராக காணப்பட்டார். இது திருத்தந்தையை ஒரு அரசியல் தலைவராக மாற்றியது.

கிபி374ல் மிலான் பட்டணத்திற்கு ஆயரான அம்புறோஸ் அரசியல் சமூக நலன்களில் பெரிதும் அக்கறைக் காட்டினார். அரசனின் அநீதிகளை வன்மையாக கண்டித்தார். அரசன் தியோடெசியு ஒருமுறை பலரைக் கொன்றபடியால் நற்கருணை வழங்க மறுத்து ஆலயத்தை மூடிவிட்டார். கைதிகளை விலைக்கு வாங்கி விடுதலையை கொடுத்தார்.

13ம் நூற்றாண்டில் வாழ்ந்த அக்குவினஸ் தோமஸ் தமது இறையியல் திரட்டு நூலில் அரசியல் பற்றி நான்கு தொகுதிகள் எழுதியுள்ளார். இறைச்சித்தப்படி இயங்கும் ஆளுகைகளை ஆதரித்தார். 16ம் நூற்றாண்டின் திருச்சபை சீர் திருத்தரான மார்ட்டின் லூதர் பிரபுக்களின் ஆட்சியில் நடந்த கொலைகள், கொள்ளைகள் இவற்றை சுட்டிக்காட்டி அவர்களுக்கு கடிதங்கள் பல எழுதினார். ஜோன் கல்வின் திருச்சபை முழுவதும் அரசியலில் ஈடுபட வேண்டும். திருச்பை தான் சமூகத்தை ஆள வேண்டும் என்றார். மேலும் அப்போது தான் அதன் ஆன்மீகப் பலம் வெளிப்படுவதாகக் கருத்துக் கொண்டிருந்தார்.

20ம் நூற்றாண்டில் அரசியல் வாழ்வை தங்கள் கிறிஸ்தவ சான்றாக அணுகியவர் அநேகர். மார்ட்டின் லூதர் கிங், போன்காய்ஃடர், பேராயர் ரொமேறோ, ரூடிலியோ, கிராண்டே, கமிலா தோரஸ், திரு.நெஸ்டர் பாஸ், ஜோன் பொஸ்கோ பெர்னியர், செல்வி ஜீன், சகோதரி ஈட்டா, கிளார்க் டொரத்தி, கிறிஸடோபர் ஸ்மித், மார்ட்டின் தோமஸ், ஜோன் பிராடா ஆகியோரைக் குறிப்பிடலாம்.

தொடரும்.....

# கிறிஸ்த சேவ ஆச்சிரமத்தின் 73 ஆவது ஆண்டுவிழா



கிறிஸ்த சேவ ஆச்சிரமத்தின் 73 ஆவது ஆண்டுவிழா புத்தெழுச்சியுடனும், பக்தியோடும் அனைத்து திருச்சபை உறவுகளின் ஒத்துழைப்போடும் சிறப்புற நிறைவேறியது. 24.08.2012 அன்று லக்சன் அண்ணனின் தலைமையில் ஆரம்ப வழிபாட்டோடு ஆரம்பமாகிய ஆண்டுவிழா தினமானது மூன்று நாட்கள் நடைபெற்றது. 25.08.2012 காலை 7.00 மணிக்கு திருவிருந்து வழிபாட்டினை அருட்பணி. G.D. மைனசீலன் போதகர் அவர்கள் வழிநடத்தி இறைசெய்தியையும் பகிர்ந்து கொண்டார். தொடர்ந்தும் நடைபெற்ற பகிரங்கக் கூட்டத்தில் கடந்த, தற்கால, எதிர்கால ஆச்சிரமவாழ்வு குறித்து கலந்துரையாடப்பட்டது, இதில் திரு. C. அருமைநாயகம் அவர்களும் தன்னுடைய பசுமையான ஆச்சிரம அனுபவங்களை பகிர்ந்து கொண்டார். மாலை கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது, இதில் இனுவில் கலாஜோதி சனசமூக நிலைத்தின் நாடக துறையினர் மற்றும் ஆச்சிரம ஞாயிறு பாடசாலை பிள்ளைகள், ஆச்சிரம நண்பர்கள் யாவரும் பங்குபெற்றினர். 26.08.2012 காலை 6.30 மணிக்கு திருவிருந்து வழிபாடு ஆரம்பமாகியது, இவ்வழிபாட்டடில் அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபையின் தலைவர் அருட்பணி. ஈனோக் பூ. புனிதராஜா போதகர், அருட்பணி. காலாநிதி. தியான்சன் கார் அண்ணன் ஆகியோர் லக்சன் அண்ணன் அவர்களால் சிறப்போடு வரவேற்கப்பட்டார்கள். தொடர்ந்தும் இவ்வழிபாட்டில் இறை செய்தியை அருட்பணி. காலாநிதி. தியான்சன் கார் அண்ணன் அவர்கள் பகிர்ந்துகொண்டார். திருவிருந்து வழிபாட்டினையும், திருமுழுக்கினையும், அருட்பணி. ஈனோக் பூ. புனிதராஜா போதகர் அவர்கள் வழிநடத்தினார்.






## ஆண்டு நிறைவு விழாவும் திடப்படுத்தலும்

அமெரிக்கன் இலங்கை மிஸன் திருச்சபை பூவரசங்குளம் தூய தோமா ஆலயத்தின் 24வது ஆண்டு நிறைவு விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. காலை திருவிருந்து வழிபாட்டுடன் ஆரம்பித்த இவ்விழாவில் இறைசெய்தியை தலைவர் அருட்திரு.ஈனோக்.பூ.புனிதராஜா அவர்கள் வழங்கினார். இந்நாளில் ஐந்து பேர் திடப்படுத்தல் பெற்று திருச்சபையின் பூரண அங்கத்தவராக இணைந்துக்கொண்டனர். தொடர்ந்து சபைக்குரு அருட்திரு.ஜே. ஞானப்பிரகாசம் அவர்களின் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தலைவர் அருட்திரு.ஈனோக்.பூ.புனிதராஜா, வன்னிப்பிராந்திய குருமுதல்வர் அருட்திரு.டீ.எஸ்.குகணேஸ்வரன், அருட்திரு.எம்.டீ.போல்சுரேஸ், அருட்திரு.எஸ்.தேவகரன், அருட்சகோ.எம்.லூக்ஜோன், சேவாலங்கா அமைப்பின் சமயங்களுக்கான இணைப்பாளர் திரு.எஸ்.எச்.ஜெகநாதன் ஆகியோர் வாழ்த்துரைகளை வழங்கினர். ஐக்கிய மதிய விருந்துடன் நிகழ்வுகள் யாவும் நிறைவு பெற்றன.

## அன்பளிப்பு

அமெரிக்கன் இலங்கை மிஷன் திருச்சபையினால் நடத்தப்படும் ஆனைவிழுந்தான் தூய பிலிப்பு முன்பள்ளி மற்றும் வன்னேரி தூய பேதுரு முன்பள்ளி போன்றவற்றின் தேவை கருதி வன்னியில் பணியாற்றி வரும் ரூத் மிஷன் நிலையத்தினால் இம் முன்பள்ளிகளுக்கு இரண்டு அலுமாரிகள் அன்பளிப்பாக அண்மையில் வழங்கப்பட்டது. இப்பொருட்களை இவ் அமைப்பின் இயக்குனர் அருட்சகோதரி. கிளாடிஸ். J. ஜெயரட்ணம் வழங்கினார்.

## இந்தியப் பயிற்சிநெறி

குடத்தனை திருச்சபை ஊழியர் வண.ஜோன் புவியரசன், பாரதிபுரம் திருச்சபை ஊழியர் வண. S.ஜோய் துரைரட்ணம் ஆகிய குருமார் இந்தியாவின் குன்னூரில் நடைபெற்ற "ஆக்கத்திற்கான பணியாள் தலைமைத்துவம்" எனும் பயிற்சி நெறியில் பங்குபற்றினர்.

இப்பயிற்சி 13-10-2-12 தொடக்கம் 20-10-2012 வரை இந்திய ஓய்வு நாட் பாடசாலை ஐக்கிய வளாகத்தில் (ISSU) நடைபெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்கன் மிஷன் ..................

(1ம் பக்க தொடர்ச்சி)

கோபம் கொண்டு 600 – 700 பேரை வாளால் வெட்டி கொன்று போட்டான். ஆனால் இதன் பின்னர் மன்னாரில் இன்னும் அதிகமானவர்கள் கிறிஸ் தவத்தைத் தழுவிக் கொண்டார்கள்.

ஆனால் பிரான்சிஸ்கன் துறவியர் தொடர்ந்தும் நற்செய்தியை மிகவும் துரிதமாகவும், உறுதியாகவும் காலி தொடக்கம் யாழ்ப்பாணம் வரை அறிவித்து வந்தனர்.

*"The Franciscan friars went on preaching the Gospel, baptizing and forming Christian communities and building churches as far as Galle in the, Jaffna in the North and Kandy in the interior. They erected 54 churches in which there were more than ·70,000 Christians. In their work they were soon joined by the Dominican and the Augustinian friars and later on, in 1602 by the Jesuits."*

இவர்கள் 57 தேவாலயங்களைக் கட்டி முடித்தனர். அத்துடன் இவர்கள் 70,000 பேரைக் கிறிஸ்தவர்களாக்கியிருந்தனர். இங்கு பணியாற்றிய பிரான்சிஸ்கன், டொமினிக்கன், அகுஸ்டேனியன் குருமாருடன் 1602ம் ஆண்டில் இயேசு சபைக் குருமாரும் இணைந்து கொண்டனர். யாழ்ப்பாணக் குடா நாட்டில் மாத்திரம் 34 தேவாலயங்கள் இவர்களால் கட்டப்பட்டன.

இன்று யாழ்ப்பாணக் குடா நாட்டிலே அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபையினுடைய தாய்த்திருச் சபையான அமெரிக்கன் சிலோன் மிஷனுடைய பராமரிப்பிலே இருக்கின்ற வட்டுக்கோட்டை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், உடுவில், தெல்லிப்பழை ஆகிய இடங்களிலே அமைந்துள்ள புராதன தேவாலயங்களும் அவைகளுக்கு அருகிலே காணப்படும் குருமாருக்கான பெரிய வீடுகளும் போர்த்துக்கேயர் காலம் கட்டப்பட்டன. போர்த்துக்கேயர் ஆலயங்களைக் கட்டி ஆரம்பத்தில் இலத்தின் மொழியிலேயே வழிபாடுகளை நடாத்தினர். எமது தமிழ் மக்களுக்கு இலத்தின் மொழி தெரியாது. எனவே வழிபாடுகளின் பிரசங்கப் பொருளை வழிபாடுகளின் இறுதியில் நாடகமாக நடித்து மக்களுக்கு விளக்குவதற்காக அவர்கள் கட்டிய ஆலயங்களுடன் பரமாண்டமான மேடைகளையும் கட்டியிருந்தனர். இன்றும் உருக்குலைந்துள்ள நிலையில் உள்ள இம் மேடைகளின் எச்சங்களை மானிப்பாய், உடுவில், பண்டத்தரிப்பு, தெல்லிப் பழைத் தேலாலயங்களுக்கு அருகில் காணலாம். இவ்வாலயங்கள் 1602ம் ஆண்டுக்குப் பின்னர் கட்டப்பட்டவையாக கருதப்படுகின்றன. ஏனெனில் 1602ம் ஆண்டு தான் இயேசு சபைக் குருமார் கொழும்பிலே தங்களுடைய முதலாவது ஆலயத்தை மேடையுடன் கட்டி வழிபாடுகளை நடாத்தியுள்ளனர். அதன் பின் அவர்கள் யாழ்ப்பாணத்திலும் ஆலயங்களுடன் மேடைகளையும், குருமார் இல்லங்களையும் கட்டியுள்ளார்கள்.

*"On the occasion of the blessing of the first Jesuit Church in Colombo on 30th November 1602, Colombo witnessed for the first time a dramatic performance got up for the occasion by the scholars of the new Jesuit school. These dramatic performances were a regular feature in Jesuit schools. Dramatic performances in Tamil were often staged in the Jesuit Churches in the seven Korales and in the Jaffna peninsula. In Jaffna they were so frequent that permanent stages were built by the side of the church for the performance of mystery plays."* (பக். 123)

இவ்வானதொரு தேவாலயம் போர்த்துக்கேய இயேசு சபைக் குருக்களால் தெல்லிப்பழையிலும் கட்டப்பட்டிருந்தது. ஒல்லாந்த குருவான பல்தேயஸ் என்பவர் இந்த ஆலயத்தைக் குறித்தும் அதன் அருகில் கட்டப்பட்ட மேடையைக் குறித்தும் எழுதி வைத்த குறிப்பு இவ்வாறு கூறுகின்றது.

*"The Jesuits and the Franciscans made good use of sacred dramatic representations of mystery plays. With reference to Jaffna Baldaeus says, 'Most of the churches here have certain Scaffolds or Theaters near them, especially that of Telipole(தெலிப்போலே) where the Jesuits used to represent certain histories of the Bible to the people on holidays."* ***(பக். 122)***

தெல்லிப்பழையில் போர்த்துக்கேயரால் கட்டப்பட்ட ஆலயம் இன்றுள்ளவண்ணமாக அல்லாமல் பலாலி, விளான் வீதிக்கு சமாந்தரமாக இருந்தது என்றும் அதனருகில் வீதியோரமாக மேடை அமைந்திருந்தது என்றும் கூறப்படுகின்றது. போர்த்துக்கேயரிடமிருந்து 1656ம் ஆண்டு ஆட்சியைக் கைப்பற்றிய ஒல்லாந்தர் இந்த தெல்லிப்பழை ஆலயத்தையே பயன்படுத்தினார்கள். போர்த்துக்கேயர் ஆலயங்களுக்கு அருகான பகுதிகளில் பாடசாலைகளை உருவாக்கி கல்விப் பணியை செய்தது போன்று ஒல்லாந்தரும் பாடசாலைகளை உருவாக்கி கல்விப்பணியினையும் ஒல்லாந்த சீர்திருத்த சமயத்தையும் பரப்பினார்கள்.

ஒல்லாந்தரைத் தொடர்ந்து 1795ம் ஆண்டு இலங்கையின் நிர்வாகத்தை கைப்பற்றிய ஆங்கிலேயர் எந்த ஒரு சமயத்தையும் பரப்புவதற்கு முயற்சி எடுக்கவில்லை. இதனாலே சலுகைகளுக்காகவும், நிர்ப்பந்தத்தின் நிமித்தமும் கிறிஸ்தவத்தைத் தழுவிக்கொண்ட பல்லாயிரக் கணக்கானவர்கள் மறுபடியும் தமது சைவ சமயத்தையே தழுவிக் கொண்டனர். இதனால் யாழ் குடாநாட்டில் ஆலயங்கள் வெறிச்சோடிக் காணப்பட்டன. யாழ் பரி.யோவான் ஆலயம் ஆட்டுக் கொட்டிலாகப் பாவிக்கப்பட்டது. பல ஆலயங்கள் கவனிக்கப்படாமல் சிதைவுற்றுப் போயிருந்தன. பல ஆலயங்கள் விஷ பூச்சிகளின் கூடாரமாகின. இது குறித்து திரு.ப. குணரட்ணம் எனும் ஆசிரியர் "ஏழாலை வடக்குத் திருச்சபை சரித்திரம்" எனும் நூலில் 7ம் பக்கத்தில் 1977ம் ஆண்டு பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

*"ஆங்கிலேயர் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் போன்றன்று யாபேருக்கும் மார்க்க சுயாதீனம் அளித்தனர். ஆகவே மிகவும் கூடிய தொகையான கிறிஸ்தவர்கள் தாங்கள் முன்னாதரித்த மதங்களைச் சேர்ந்தனர். இதன் காரணமாக கிறிஸ்து மதம் முற்றாக அழியப் போகும் நிலை ஏற்பட்டது. இதைப் பற்றி ஆங்கிலேய அரசாங்கம் ஒரு சிறிதேனும் கவலைப்படவில்லை. இந்நிலையைக் கவனித்த சில உண்மையும் பக்தியும் விசுவாசமும் உள்ள கிறிஸ்தவர்கள் துக்க சாகரத்தில் மூழ்கினர். இந்த மாற்றத்தினால் யாழ்ப்பாணமே அதிகம் தாக்கப்பட்டது. 1806ம் ஆண்டு இந்தியாவிலே சுவிசேஷ ஊழியம் செய்த கலாநிதி புக்கானன் (Dr.Buchanan) என்னும் குரு யாழ்ப்பாணம் வந்து நிலைபரத்தை நேரில் அறிந்து, அவ் விஷயத்தை லண்டன் மிஷன் சங்கத்துக்கு அறிவித்தார். அச் சங்கம் மூன்று மிஷனரிமாரை இலங்கைக்கு அனுப்பியது. அவர்களில் ஒருவரான வண.பாம் (Rev.Palm) பாதிரியார் தெல்லிப்பழையில் எட்டு வருடங்கள் தங்கிச் சுவிசேஷ ஊழியம் செய்தார்."*

கனம் சாமுவேல் நியூவெல் எனும் இளம் குருவானவரும் அவரது மனைவி 'ரியற் அட்வூட் நியூவெல் அவர்களும் 1812ம் ஆண்டு மாசி மாதம் 19ம் திகதி சாலே நகர துறைமுகத்திலிருந்து "கரவன்" என்னும் பாய்க்கப்பல் மூலம் இறை பணிக்கென்று பயணமாகினர். வழியில் தனது அருமையான மனைவியையும் பாய்க் கப்பலிலேயெ பிறந்த குழந்தையையும் பறிகொடுத்த அவர் இறைவனின் அதிசய வழிநடத்துதலினால் ஏறத்தாழ ஒரு வருட காலத்தின் பின் 1813ம் ஆண்டு மாசி மாதம் 24ம் திகதி கொழும்புக்கு வந்து சேர்ந்தார். கொழும்பிலே 10 மாத காலம், தேசாதிபதியாக இருந்த சேர் பிறவுண்டிரிக் அவர்களுடன் தங்கியிருந்த பின்பு 1813ம் ஆண்டு புரட்டாதி மாதம் 7ம் திகதி யாழ்ப்பாணத்துக்கு வந்து பொலிஸ் நீதிபதி J.N.முயாட் என்பவரோடு தங்கியிருந்தார். பின்னர் ஐப்பசி 22ம் திகதி தெல்லிப்பழைக்கு வந்து ஒல்லாந்தரால் பாவிக்கப்பட்டு இறுதியாக "பாலன் பாதிரியார்" என்று அழைக்கப்பட்ட Rev.Palm அவர்கள் இருந்த வீட்டில் குடியேறினார். பாலன் பாதிரியார் 8 வருடங்களின் பின்னர் கொழும்புக்குச் சென்றுவிட்டார். நியூவெல் ஐயர் யாழ்ப்பாணம் வந்தபொழுது புரட்டஸ்தாந்து குருவாக கிறிஸ்டியன் டேவிட் போதகர் ஒருவரே யாழ்ப்பாணம் சுண்டுக்குளியில் ஊழியம் செய்து வந்தார். தெல்லிப் பழைக்கு வந்து முதல் குடியேறிய அமெரிக்கன் மிஷன் குரு வண.சாமுவேல் நியூவெல் அவர்கள். இவர் 5 அம்சங்கள் கொண்ட ஒரு கடிதத்தை அமெரிக்கன் சங்கத்துக்கு எழுதி பாழ்ப்பாணம் மிஷன் பணிக்கு உகந்த இடம் என்றும் மேலும் மிஷன் தொண்டர்களை அனுப்பும்படியும் கோரியிருந்தார். இவாரின் வேண்டுகையின் பேரிலேயே முதலாவது மிஷன் தொண்டர் அணி வண.டானியல் பூவர் தலைமையில் 1816ம் ஆண்டு இலங்கைக்கு அனுப்பப்பட்டனர்.

தெல்லிப்பழை தனித் திருச்சபை

வட்டுக்கோட்டை, உடுவில், தெல்லிப்பழை, மானிப்பாய், பண்டத்தரிப்பு எனும் 5 சபைகளும் அமெரிக்க மிஷனரிமார் பணிகளை ஆரம்பித்த காலம் தொடக்கம் "அமெரிக்கன் சிலோன் மிஷன்" சபையெனவே அழைக்கப்பட்டது. 1831ம் ஆண்டு இந்த 5 சபைகளும் பிரிக்கப்பட்டு அந்தந்த இடங்களில் வசித்தவர்கள் அந்தந்த சபைகளின் அங்கத்தவர்களாக சேர்க்கப்பட்டனர். பிரிக்கப்படும்போது இந்த 5 சபைகளிலும் இருந்த மொத்த சபையார் தொகை 192. பிரிக்கப்பட்ட பின்னர்:-

- ■வட்டுக்கோட்டை-69 அங்கத்தவர்கள்
- ■உடுவில்- 49 அங்கத்தவர்கள்
- ■தெல்லிப்பழை - 29 அங்கத்தவர்கள்
- ■மானிப்பாய்- 24 அங்கத்தவர்கள்
- ■பண்டத்தரிப்பு - 21 அங்கத்தவர்கள்

மொத்தமாக 192 அங்கத்தவர்கள்

அவ்வேளையில் அந்தந்த இடங்களில் பணி செய்த மிஷனரி மாரே அந்தந்த சபைகளின் போதகர் மாராக பொறுப்பேற்றுக் கொண்டனர்.

புதிதாக அமைக்கப்பட்ட ஆலயம்

1835ம் ஆண்டு தெல்லிப் பழையிலே அமைந்திருந்த ஆலயமும் பாடசாலையும் விஷமிகளாலே எரிக்கப்பட்டன. அவ் வேளையில் ஆலயம் KKS வீதிக்கு சமாந்தரமாக அல்ல விளான் - பலாலி வீதிக்கு சமாந்தரமாகவே அமைக்கப் பட்டிருந்தது. இது போர்த்துக் கேயரினால் கட்டப்பட்டு பின்னர் ஒல்லாந்தரினால் பாவிக்கப்பட்ட ஆலயம். ஆங்கிலேயர் காலம் அமெரிக்கன் மிஷன் தொண்டர்களும் சில திருத்தங்களுடன் அதே ஆலயத்தைப் பாவித்து வந்தனர். ஆனால் இப்போ முற்றிலும் எரிந்து போன ஆலயம் புதிதாக கட்டப்படும் போது KKS வீதிக்கு சமாந்தரமாகவே கட்டப்பட்டது. இதன் வரலாற்றை C.D.வேலுப்பிள்ளை போதகர் தான் எழுதிய "அமெரிக்க இலங்கை மிஷன் சரித்திரம்" எனும் நூலில் 120ம் பக்கத்தில் பின்வருமாறு கூறுகிறார்:

"1835ம் வருஷத்தில் தெல்லிப்பழை தேவாலயமும் அவ்விடமிருந்த பாடசாலையும் எரிக்கப்பட்டன. அப்பாடசாலைக்கு வேண்டியதாய் அங்கே சேர்த்து வைக்கப்பட்ட புத்தகங்கள் யாவும் எரிந்து போயின. அக்காலத்தில் தெல்லிப்பழை மிஷனரியாக இருந்த குவிக் ஐயர் எரிந்த பழைய ஒல்லாந்தரின் ஆலயத்தின் மேற்கு அந்தத்தின் தூண்களுக்கிடைப்பட்ட அகலத்தையே நீளமாக கொண்டு ஒரு புதிய ஆலயத்தை கட்டி முடித்தார். அது வட்டுக்கோட்டை ஆலயம் போலக் கிழக்கு மேற்காய்ப் பெரிய ஆலயமாகவிருந்தது. புதிய ஆலயம் பிற்காலத்தில் இரண்டு மூன்று முறைகளில் வடக்கு புறமாக கட்டப்பட்டு இப்போது காணப்படுகின் அளவாகப் பெரிப்பிக்கப்பட்டிருக்கின்றது."(1984)

இன்று யூனியன் கல்லூரியாக விளங்கும் பாடசாலையே 1816ல் யாழ் குடாநாட்டில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது ஆங்கிலத் தருமப் பாடசாலையாகும். 1819ம் ஆண்டு இப் பாடசாலையில் 48 மாணாக்கர் கல்வி கற்றதாக வரலாறு கூறுகின்றது. இவ்வாறு மிஷனரிமார் காலம் தெல்லிப்பழை பல வகைகளிலும் வரலாற்றுப் பதிவிலே இடத்தைப் பெற்றுக்கொண்டது. அமெரிக்கன் மிஷன் தொண்டர்களின் முதலாவது பணிக்களம், முதலாவது வைத்தியசாலை, முதலாவது ஆங்கிலப் பாடசாலை, முதல் பெண்களுக்கான கல்வி, முதலாவது அச்சு இயந்திரசாலை, முதலாவது திருவிருந்து, முதலாவது அமெரிக்கன் மிஷன் தொண்டரின் மரணம் இவ்வாறு இவையெல்லாம் நடைபெற்ற தெல்லிப்பழையிலேயே.

அமெரிக்கன் மிஷன் தெல்லிப்பழைத் திருச்சபை யாழ்ப்பாணப் பகுதிகளிலே காணப்பட்ட சாட்சிமிக்க பெரிய திருச்சபையாக திகழ்ந்தது. இது இன்றும் தெல்லிப்பழைத் திருச்சபைமக்களுக்கு மிகவும் பெருமை தருகின்ற ஒரு விடயமாகும்.

இந்த தெல்லிப்பழைத் திருச்சபையும் 1947ம் ஆண்டு மார்ட்டின் லூதருக்குப் பின் உலகிலேயே ஏற்பட்ட மிகப் பெரிய திருச்சபை ஐக்கியமான தென்னிந்திய திருச்சபை உதயத்தில் யாழ்ப்பாண ஆதீனம் உருவாக்கப்பட்டபோது அதன் ஒரு அங்கமாக அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்டது. அமெரிக்கன் சிலோன் மிஷன் சபையாளுகை முறையாகக் கொண்டது. இப்போது 1947க்குப் பின் இச் சபையும் பேராயராளுகை முறைக்குள் சென்றது.

1989ம் ஆண்டு, நடைபெற்றுக் கொண்டிருந்த இலங்கையின் இன யுத்தம் தெல்லிப்பழைப் பகுதியில் மிகத் தீவிரமடைந்தமையால் அவ்வேளையில் தெல்லிப்பழைக் குருவாக இருந்த வண.ஊ.வு.றொபேர்ட்ஸ் அவர்களும் சபைமக்களும் ஊர் மக்களுடன் கூட அனைத்தையும் விட்டுவிட்டு வெளியேறி குடாநாட்டில் பல்வேறு இடங்களுக்கும் இடம்பெயர்ந்தனர். தெல்லிப்பழைத் திருச்சபையின் வழிபாடுகள் இனுவில் மக் லியோட் வைத்தியசாலையிலும் மருதனார்மடம் பெண்கள் இல்லத்திலும் முழுளு வீதியில் உள்ள தனியார் வீடுகளிலும் இறையியற் கல்லூரியிலும் உரும்பிராயிலும் எனப் பல்வேறு இடங்களிலும் பல அசௌகரியங்களுக்கு மத்தியில் நடைபெற்றன.

2012ம் ஆண்டு உயர் பாதுகாப்பு வலயத்துக்குள்ளே இருந்த ஆலயத்தில் வழிபடும் நிலைபரம் ஏற்பட்டு, தற்போது ஆலயம் ஓரளவு திருத்தப்பட்டு மக்கள் மகிழ்வுடன் தம் ஆலயத்தில் விளக்கேற்றி வழிபடத் தொடங்கியுள்ளனர். இறைவனுக்கே எல்லாப் புகழும் மகிமையும் உண்டாவதாக.

- ஏயெஸ்ரி -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யாழ்.பிராந்திய பிள்ளைகள் விழா 2012

அண்மையில் யாழ். பிராந்தியத்தின் சமயக்கல்விக் குழுவினரின் ஏற்பாட்டில் நடைபெற்ற 2012ம் ஆண்டுக்கான பிள்ளைகள் விழா வரலாற்றுச் சிறப்பு மிக்க தெல்லிப்பழை தேவாலயத்தில் 26 வருடங்களின்பின் மீண்டும் கோலாகலமாக நடாத்தப்பட்டது. இவ் விழாவில் யாழ்.பிராந்திய திருச்சபை பிள்ளைகளும் கொழும்புத் திருச்சபை பிள்ளைகளும் கலந்து கொண்டு பல போட்டிகளில் பங்கெடுத்து பரிசில்களை தட்டிச் சென்றனர்.

# வன்னிப் பிராந்திய வாலிபர் பாசறை 2012

வன்னிப்பிராந்திய திருச்சபைகளின் வாலிபர்களுக்கான வாலிபர் பாசறை "நீ என்னை நேசிக்கின்றாயா?" எனும் கருப்பொருளில் பூவரசங்குளம் புனித தோமா ஆலய வளாகத்தில் நான்கு நாள் பாசறையாக நடைபெற்றது. வன்னிப்பிராந்நிய வாலிபர் ஐக்கியத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெற்ற இவ்வாலிப பாசறையில் 60 வாலிபர்கள் கலந்து கொண்டனர்.

இப்பாசறையில் சிறப்பு திருமறைப் படிப்புக்களை வன்னிப்பிராந்திய குருமுதல்வர் அருட்திரு.டி.எஸ் குகனேஸ்வரன், கிழக்கு மாகாண சமயக்கல்விக்குழு இயக்குனர் அருட்திரு.ராஜன் றொகான், இலங்கை பப்டிஸ் திருச்சபையைச் சேர்ந்த அருட்திரு. எஸ்.ரமேஸ், அருட்திரு.எம்.டி. போல்சுரேஸ் ஆகியோர் நடத்தினர். காலை வேளை தியானங்களை வன்னிப்பிராந்திய செயலாளர் அருட்திரு .டி . எஸ். மதியாபரணம், அருட்திரு .ஜோன்.எஸ்.செல்வம் ஆகியோர் நடத்தினார்கள். அருட்திரு .எம்.ஜெயானந்தன் யோகாசனம் மூலம் வாலிபர்களை வழி நடத்தினார். விளையாட்டுக்கள் மற்றும் பாடல்களுடாக அருட்திரு.எஸ். லிங்கேஸ்வரன் வாலிபர்களை உற்சாகமூட்டினார். மாலை நேர துதி வழிபாடுகளை அருட்சகோதரர்களான ந.கங்காபிராசாத் மற்றும் பி.சுதாகரன் மிகவும் சிறப்பாக நடத்தினர். பாசறையில் நாடகப்பயிற்சி பட்டறையை வவுனியா திருமறைக் கலா மன்றத்தினர் நடத்தினர்.

இந் நான்கு நாள் பாசறைக்கு வருகை தந்திருந்த ஊழியர்கள், வாலிபர்கள் அனைவருக்குமான தங்குமிடம், உணவு, போன்ற அடிப்படை தேவைகள் யாவற்றையும் பூவரசங்குளம் சபை ஊழியர் அருட்திரு.ஜே.ஞானபிரகாசம் செவ்வனே ஒழுங்கு செய்திருந்தார்.

இப்பாசறையில் அநேக வாலிபர்கள் முதற் தடவையாக கலந்து கொண்டு புதிதான அனுபவங்களைப் பெற்றுக் கொண்டனர். இப்பாசறையில் ஒழுங்குசெய்யப்பட்டிருந்த அனைத்து காரியங்களும் வாலிபர்களுக்கு புதிதான அனுபவங்களை கொடுத்ததை அவர்களது இறுதி நாள் அறிக்கையின் ஊடாக அறிய முடிகிறது.

இப்பாசறையை வன்னிப் பிராந்திய சமயக் கல்விக்குழு இயக்குனர் அருட்திரு.எஸ். துரைரத்தினம், வாலிபர் ஒருங்கிணைப்பாளர் அருட்சகோ.ம. லூக்ஜோன் ஆகியோர் நெறிப்படுத்தினர்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்

# பிள்ளைகள் விழா




வன்னிப்பிராந்திய திருச்சபைகளின் ஞாயிறு பாடசாலை பிள்ளைகளுக்கான பிள்ளைகள் விழா பாரதிபும் அ.த.க பாடசாலை மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. பாரதிபுரம் அமெரிக்கன் சிலோன் மிசுஷன் திருச்சபை ஞாயிறு பாடசாலை பிள்ளைகளினால் வழிபாடு நடத்தப்பட திரு.ஸ்ரீபன் மறையுரை ஆற்றினார். " ஆண்டவரே என் ஆயர்" எனும் தொனிப்பொருளில் அனைத்து நிகழ்வுகளையும் சமயக்கல்விக்குழு இயக்குனர் அருட்திரு.ஜே. துரைரத்தினம் ஒழுங்கமைத்து இருந்தார். வயதடிப்படையிலும் சபை மட்டத்திலும் மனனம், சித்திரம், கட்டுரை, தனிப்பாடல் ,குழுப்பாடல், திருமறைப்புதிர்போட்டி என்பன நடைபெற்றன.

# சிறுவர் உரிமையைப் பாதுகாப்போம்

அக்டோபர் 1ம் திகதி உலக சிறுவர் தினமாக உலகெங்கும் கொண்டாடப்பட்டு வருகின்றது. இத் தினமானது சிறுவர்களின் நலனைப் பேணும் முகமாக நசுக்கப்படுகின்ற, ஒடுக்கப்படுகின்ற பிள்ளைகளுக்கு உரிமையினை பெற்றுக் கொடுக்கின்ற தினமாகவும் சிறுவர் தொடர்பான விழிப்புணர்வை சகல தரப்பினருக்கும் புரிய வைக்கின்ற நிகழ்வாகவும் அமைகின்றது.

சிறுவர் எனப்படுபவர்கள் 18 வயதுக்குட்பட்ட அனைவரையும் குறிக்கும். சிறுவர்களின் மேம்பாட்டிற்கென்று ஐக்கிய நாடுகள் சமவாயம்(UNCRC) 1989ம் ஆண்டு நவம்பர் மாதம் 20ம் திகதி ஐ.நா பொதுக் கூட்டத்தில் உருவாக்கப்பட்டது. இதில் சிறுவர்களின் பாதுகாப்பு, உயிர் வாழ்தல், பங்கு கொள்ளுதல், உரிமை மேம்பாடு என்பன தொடர்பாக குறிப்பிடப்பட்டு அரசு மற்றும் சமூகம் செய்ய வேண்டிய பொறுப்பு பற்றியும் கூறப்பட்டுள்ளது. இச்சமவாயம் இலங்கையிலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இலங்கையில் சிறுவர் உரிமையை பாதுகாக்க பல அமைப்புகள் இருந்தாலும் நாளாந்தம் எங்கேயோ ஒரு மூலையில் சிறுவர் உரிமை மீறப்பட்டு வருவதை ஊடகங்கள் வாயிலாக அறியமுடிகின்றது. எத்தனையோ வெளியே வராமல் மறைக்கப்படுகின்றது. இன்று பல விதத்திலும் சிறுவர் உரிமைகள் மீறப்பட்டு வருகின்றது. அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவு முறையினால் பிள்ளைகளின் தேவைகளை பெற்றோரால் நிறைவு செய்ய முடியவில்லை. வறுமை நிலையில் உள்ள பெற்றோர் தமது பிள்ளைகளுக்கு கல்வி செயற்பாட்டை ஒழுங்காக பெற்றுக் கொடுக்க முடியாத நிலையில் பிள்ளைகளின் எதிர்காலம் வீணடிக்கப்படுகின்றது.

இதனால் சிறுவர்கள் தொழிலுக்குப் போகும் துர்ப்பாக்கிய நிலைக்குத் உள்ளாக்கப்படுகின்றனர். இவர்கள் தொழிற்சாலைகளில் கடின வேலையில் ஈடுபடும் போது மிகவும் பாதிக்கப்படுகின்றனர். மிகக் குறைந்த வயதில் பிள்ளைகளை வேலைக்கு வைத்திருப்பதால் தொழில் வழங்குனர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க முடியும். பிள்ளைகளை பாதுகாக்க தொழில் சட்டம் உதவிபுரிகின்றது. இது நடைமுறையில் குறைவாகவே உள்ளது.

நவீன வளர்ச்சிப் போக்கின் தன்மைக்கு ஏற்ப சிறுவர் உரிமைகள் பல வழிகளிலும் மீறப்படுகின்றது. வளர்ந்து வரும் நாகரீக மாற்றம், கலாச்சார சூழல், வெளிநாட்டவர் வருகை என்பவற்றால் கூடுதலாக பிள்ளைகளின் நலன் பாதிக்கப்படுகின்றது. சிறுவர்களை அவதானத்துடன் வைத்திருக்க வேண்டும். எமது பிள்ளைகள் நாட்டின் சொத்துக்கள். அவர்களை பாதுகாப்பது நாட்டினதும் சமூகத்தினதும் கடமையும் பொறுப்புமாகும்.

ஒவ்வொரு பொறுப்புள்ள மனிதனும் பிள்ளை செல்வத்தை மதித்து அதன் உரிமைகளை பெற்றுக் கொடுத்து நல்வ வளமுள்ளவாகளாக மாற்ற வேண்டிய கடமைக்கு உட்பட்டவர்கள். குறிப்பாக திருச்சபையின் செயற்பாட்டில் பிள்ளையின் உரிமை பேணுவது என்பது முக்கிய கடமையாக உள்ளது.

இயேசு கிறிஸ்து தனது பணியில் சிறுவர்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதை நாம் அறிவோம். எனவே சிறுவர்களின் வாழ்வுக்கு நல்ல களம் அமைத்து அவர்களின் உரிமையை மேம்படுத்த சிறுவர் தினத்தில் உறுதிபூணுவோம்.

ச.பெ.சத்தியசீலன்
பரிதோமா ஆலயம்
முறக்கொட்டான்சேனை

அண்மையில் மன்னார் CACM திருச்சபையில் நடைபெற்ற திடப்படுத்தல் வழிபாட்டின் போது எடுக்கப்பட்ட சில காட்சிகளை கீழுள்ள படங்களில் காணலாம்.









# திருமுழுக்கு வழிபாடு

அமெரிக்கன் சிலோன் மிஷன் தெல்லிப்பழைத் திருச்சபை மக்கள் கடந்த 22 வருடங்களாக இடம்பெயர்ந்து யாழ்ப்பாணத்தின் பல் வேறு பகுதிகளிலும் வசித்து வருகின்றனர். ஆனாலும் தெல்லிப்பழை திருச்சபை வாழ்வை இழந்து போகாமல் பல இடங்களிலும் தமது வழிபாடுகளை நடாத்தி திருச்சபையின் ஆன்மீக, சமூகப்பணிகளை முன்னெடுத்து வந்தனர்.

இறைவனினுடைய அருளினால் திரும்பவும் தமது சொந்த ஆலயத்தில் தமது வழிபாடுகளை நடாத்தி வருகின்றனர். மீள் குடியேற்றம் பூரணமாக நிறைவுறாத போதிலும் குடா நாட்டின் பல இடங்களிலிருந்தும் வந்து வழிபாடுகளில் பங்கு கொண்டு வருகின்றனர்.

கடந்த 2-9-2012 அன்று நீண்ட இடைவெளியின் பின்னர் தெல்லிப்பழை ஆலயத்தில் வளர்ந்தோர், சிறுவர் உட்பட 5 பேர்திருமுழுக்கை பெற்றுக் கொண்டனர்.

திருமதி.சுதாகர் தனுசலா, செல்வி.பூபாலன் சுதாகர் ஜெஷீபா, செல்வன். விஜயகுமார் லதுசன், செல்வி. உதயகுமார் தர்சினி, செல்வி. உதயகுமார் யஸ்மினி ஆகியோருக்கு வண.ஜெ.அன்ரனி சுதாகர் அவர்களினால் திருமுழுக்கு வழங்கப்பட்டது.







இப்பத்திரிகை அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபையின் உதயதாரகை பத்திரிகை ஆசிரியரால் யாழ் வீதி அச்சுவேலி... சந்தியில் அமைந்துள்ள ரூபன் அச்சகத்தில் அச்சிடப்பட்டு 29-10-2012 அன்று வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org